இதற்கு - வடமொழியாலன்றி வேறோர் மொழியினால் பாட்டுப்பாடிய கைசிகன் முதலியோரைத் தனது நாட்டிலிருந்து துரத்திய தருமசீலனான ஓர் அரசனை அவன் மரணமடைந்த பின்பு யமகிங்கரர்கள் நரகலோகத்திற்கு அழைத்து வர, பல வகைப் புண்ய கருமங்களைச்செய்த அவ்வரசன் 'எப்போதும் சிறிதும் பாபம் செய்யாமல் பற்பல புண்ணியகருமங்களையே செய்து போந்த நான் எதற்காக இங்கு அழைத்து வரப்பட்டேன்! என்று வருத்தத்தோடு கேட்க, அதற்கு யமதர்மராஜன் "விஷ்ணுவின் புகழையன்றி மற்றவற்றைப்பற்றிய தேசபாஷைப் பாட்டையே ப்ராஹ்மணன் பாடக்கூடாது. ஹே ராஜன்! தேச பாஷையால் அமைந்த பாட்டைப் பாடக்கூடாதென்று நினைந்த நீ தேசபாஷையால் விஷ்ணுவின் குணங்களைப் பாடிய கைசிகாதிகளை உனது நாட்டிலிருந்து துரத்தியதனால் நீ பாபம் செய்தது உண்மையே. அதனால்தான் நீ இங்கு அழைத்து வரப்பட்டாய்" என்று கூறினான். அதற்குமேலும் அவ்வரசன் "ஆனால் வேறுபாஷையாலமைந்த பாட்டைப் பாடக் கூடாதென்கிற மறுப்புரைக்கு என்ன கதி!" என்று கேட்க, 'ஓ அரசே, விஷ்ணுவின் கீர்த்தியைத் தவிர வேறு விஷயத்தைப்

பற்றிய தேசபாஷைப்பாட்டை ப்ராஹ்மணன் பாடலாகாது. கைசிகாதிகளோவென்றால் விஷ்ணுவின் குணங்களையே பாடினர். அவர்களைத் துரத்தியது அநியாயமாகையாலே 'நீ பாபியே ஆவாய்' என்று தர்மராஜன் விடையளித்தான்.

இந்த யமவசனத்திலிருந்து, பாஷைப்பாட்டைப் பாடக்கூடாதென்ற விதிக்கு விஷ்ணுவைத் தவிர்த்து மற்ற விஷயத்திலே நோக்குடையதென்னும் விஷயம் ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. இங்ஙனமல்லாமல் பாடவேண்டும் என்ற விதிக்கு ஸம்ஸ்க்ருபாஷைப் பாட்டே இலக்கென்றும் பாஷைப் பாட்டைப் பாடலாகாதென்ற விலக்குக்கு ஸம்ஸ்க்ருத மொழிந்த மற்றை எல்லாப்பாஷையாலும் அமைந்த பாட்டுக்களே இலக்கென்றும் கொண்டால் - ஸம்ஸ்க்ருத பாஷையிலமைந்த வேத பாஹ்யரான ஜைன பௌத்தாதியர் இயற்றிய சாஸ்த்ரங்களையும் வைதிகர்களான நாம் கற்கவேண்டியதாக ஏற்பட்டு விடுமன்றோ?

ஆழ்வார்கள் கைம்மாறு கருதாத தமது கிருபா கடாக்ஷத்தாலே, ஸம்ஸ்க்ருத வேதமோதுவதற்குத் தகுதி பெறாதிருக்கிற பெண்கள் நான்காம் வருணத்தவர் முதலியவர்களை உய்விக்க ஆசைகொண்டு ஸம்ஸ்க்ருத வேதங்களின் பொருள்களைத் தமிழ்மொழியால் பெயர்த்து உரைத்தமையாலும் பகவானுடைய திருவருளுக்கு இலக்காகும் பாக்கியத்தைப் பெற்று இடைவிடாத பகவத்கடாக்ஷத்திற்குப் பாத்திரமாய், பரம்பொருள் இன்னது அதைப்பெறுவதற்கு உபாயம் இன்னதென்று பகுத்தறியும் ஆற்றலைப் பெற்று அவற்றைப் பிறர்க்கு உபதேசம் செய்வதிலும் முயன்ற விதுரர் சபரீ முதலியோரைக் காட்டிலும் உயர்ந்தவர்களான ஆழ்வார்களிடமிருந்து இந்தத் திவ்யப்ரபந்தங்கள்ள் அவதரித்தமையாலும், தமிழ்தெரியாமல் மற்றமொழிகளையே பேசக்கற்ற மிகவுயர்ந்த தேசாந்தர மக்கள் - இந்த திவ்யப்ரபந்தங்களின் தனிச்சிறப்பைக் கேள்விப்பட்டு 'இந்த திவ்யப்ரபந்தங்கள் விசேஷமாக நடையாடுகிற நாட்டிலே நாம் பிறக்கப்பெற்றிலோமே, சீ நம் துரதிர்ஷ்டத்தின் கொடுமை என்னே!என்று தம்மனம் பரிதபிக்கக் காண்கையாலும், இவற்றினுடைய மிக்க பெருமையை ஆராய்ந்து, வேதார்த்த ஜ்ஞானத்திற்கு யோக்யதையில்லாத அவைதிகர்களும் கூட இவற்றை

ஏற்றுக்கொள்வதென்பது கொண்டாடத்தக்க இவற்றின் பெருமைக்கே காரணமாக முடிவதனாலும், உபநிஷத்துக்களில் வேதனமென்றும் உபாஸனமென்றும் கூறப்படுகின்ற பக்தியே இவற்றில் பகவத் காமமென்று கூறப்படுவதனாலும், ஐச்வர்ய கைவல்யங்களை இங்குக் குறைகூறியது, முறையே இவற்றால் உண்டாகும் இன்பம் நிலைநில்லாதென்றும் அளவுபட்டதென்றும் எண்ணியேயாகையாலும், இவற்றால் அறியப்படும் பரமாத்மாவிற்குள்ள பெருமையின் மிகுதியாலும், பரமபுருஷனுடைய ஸ்வரூபத்தைத் தெளிவாக உரைப்பதனாலும், அப்பெருமானிடத்தில் பக்தியை உண்டாக்குவதனாலும், உண்டான பக்தியை மேன்மேலும் வளரச் செய்வதனாலும், இவற்றில் அறிவிக்கப்படுகிற விஷயங்களுக்கு ஸம்ஸ்க்ருத வேதங்களைப் பலவிடங்களில் ஸாக்ஷியாகக் காட்டுவதனாலும், ப்ரஹ்மமே ஜகத்காரணமென்று கூறுவதனாலும், ப்ரஹ்மஜ்ஞானத்தினால் மோக்ஷமுண்டாகிறதென்கையாலும், புருஷார்த்தத்தைத் தெரிவிக்கும் எல்லா நூல்களைக் காட்டிலும் இந்த திவ்ய ப்ரபந்தங்களுக்குப்ரபலப்ராமாண்யத்தைஅசைக்கமுடியாதபடி மிக வலிமைபொருந்தியதாய் உண்மையை அறிவிக்கும் நூலாயிருக்குந் தன்மையை முதலித்து, வேதமார்க்கத்தை ஆராய்ந்தறியும் ஆற்றலுடைய வைதிகர்களாகிய பெருமக்கள் விடை கூறினர்.

இந்த எதிர்வாதமும் விடையும் - ஸ்ரீமத்ராமாநுஜரின் உறுதியான கொள்கையை நிச்சயித்துக் கூறும் பொறுப்பை ஏற்பதில் முதல்வரான நம்பிள்ளையின் சிஷ்யராகிய வடக்குத் திருவீதிப்பிள்ளை அருளிய ஈடுமுப்பத்தாறாயிரப்படியென்னும் திருவாய்மொழி வ்யாக்யானத்தின் மஹாப்ரவேசத்தில் (= பெரிய முன்னுரையில்) இத் திவ்யப்ரபந்தங்களின் பெருமையை நிலைநாட்டும் பகுதியில் அருளிச் செய்யப்பட்டுள்ளது.

இங்ஙனமே முதற்பத்து நான்காந் திருவாய்மொழியான அஞ்சிறைய மடநாரையின் அவதாரிகையிலும், 'முற்காலத்தில் அறிவில் சிறியோனொருவன் - இந்தத் திருவாய்மொழி - வைராக்யமுடைய பெரியோர்கள் கைக்கொண்டிருப்பதனால் பரம்பொருளை இன்னதென்று அறுதியிடும் நூலாயிருக்குமென்று நினைத்து இதைக் கற்பானாய் இந்த அஞ்சிறைய

மட நாரையென்னும் முதற்பாசுரத்தைக் கற்கும்போது ஆழ்வாராகிய நாயகிக்கு புருஷோத்தமனாகிய ஸ்ரீமந் நாராயணனிடத்தில் உள்ள த்ருடமான காதலென்னும் உள்ளக் கருத்தைக் கேட்டவுடன் "ஐயோ இது காதலர் பேச்சாயிருக்கிறதே' என்று மாறாக எண்ணிக் கைவிட்டானாம். 'நிதித்யாஸிதவ்ய:' (பகவான் த்யானம் செய்யத்தக்கவன்) என்றிது முதலிய வடமொழி வேதத்தினால் விதிக்கப் படுகிற பகவத்காமமென்று பாக்யமில்லாமையாலே அறியப்பெற்றிலன் - எனறும் " அந்த ஈட்டில் அருளிச் செய்யப் பட்டிருக்கிறது.

இப்போது கூறிய இவ்விஷயங்களைத் திருவுள்ளத்திற் கொண்டு ஸ்ரீவேதாந்ததேசிகர் தமது த்ரமிடோபநிஷத் தாத்பர்யரத்நாவளியின் அவதாரிகையில் 'பாஷாகீதி: என்று தொடங்கி ஒரு ச்லோகம் அருளியுள்ளார். 'பகவானைக் கூறுவதனால் தமிழ்மொழிப் பாட்டுகள் மிகவுயர்ந்தவை. அரசனைப்போல் பகவானை உபசரிக்க வேண்டுமென்று சாஸ்த்ரம் கூறுவதனால் அரசனைத் தமிழ்மொழியால் துதிப்பது போல் பகவானையும் தமிழ்மொழிப்பாட்டால் துதிக்கலாம். அத்தமிழ்மொழியோ அகஸ்த்ய முனிவரிடமிருந்து தோன்றியதென்னும் காரணத்தினால் ப்ராஹ்மணாதி ஜாதி பேதமுடைய எல்லோராலும் கற்கத் தக்கதாகப் பெரியோர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. முனிவர் கணங்கள் இயற்றிய இதிஹாஸ புராணங்கள் வேதங்களுக்கு - விவரணம் செய்தவென்னும் எந்தக் காரியத்தைச் செய்கின்றனவோ அந்தக் காரியத்தில் ஸத்த்வ குணத்திற்குப் பூர்ணாச்ரயமான சடகோப முனிவரின் வேதமாகிய திருவாய்மொழி பட்டாபிஷேகம் செய்யப்பட்டு (இதிஹாஸ புராணங்களை விட) மேம்பட்டு விளங்குகிறது என்பது அந்தச்லோகத்தின் கருத்தாகும்.

இத்தகைய ஆசார்யச்ரேஷ்டர்களின் ஸ்ரீஸூக்தி ரத்னங்களை மூலப்ரமாணங்களாகக் கொண்டு இனிச் சிறிது விரித்துரைப்போம்.

முதல் அதிகாரம் முற்றுப் பெற்றது.

(உ) வேதாந்தாசார்யர் அருளிய ப்ரமாணங்களை விவரித்தல்

இவ்வதிகாரத்தில், வடகலையாருக்கு ஆசார்யரான வேதாந்ததேசிகர் திவ்யப்ரபந்தத்தின் பெருமைக்கு ப்ரமாணமாக அருளிய ஸ்ரீஸூக்திகள், அவர்கள் திடமாக நம்புவதன் பொருட்டுக் காட்டப்படுகின்றன.

ஸ்ரீமந்நிகமாந்தகுரு இயற்றிய பாதுகாஸஹஸ்ரத்தில் ப்ரஸ்தாவபத்ததியில், வர்ணஸ் தோமை:' என்று தொடங்கும் மூன்றாம் ச்லோகத்தின் இரண்டாமடி 'ஆம்நாயாநாம் ப்ரக்ருதிமபராம் ஸம்ஹிதாம் த்ருஷ்டவந்தம்' என்பது. இவ்வடி வடகலையாரைச் சேர்ந்த ஸ்ரீமான் சயுண்ணி பாரத்வாஜ ஸ்ரீநிவாஸாசார்யரால் "ஆம்நாயாநாம் = வேதங்களுடைய, அபராம் ப்ரக்ருதிம் = மற்றொரு பிரிவாகிய, ஸம்ஹிதாம் = தமிழ் வேத வாக்யத்தொகுதியை, த்ருஷ்டவந்தம் = கண்ட ஆழ்வாரை; விச்வாமித்ராதி முனிவர்கள் (நித்யமான) காயத்ரீ முதலிய மந்த்ரங்களை இறைவனருளால் கண்டது போலவே ஆழ்வாரும் (நித்யமான) திருவாய்மொழியை எம்பெருமானால் அருளப்பெற்றுத் தமது அகக்கண்ணால் 'கண்டு வெளிப்படுத்தியது மட்டுமேயன்றி புதிதாகத் தாமியற்றினமை இல்லை." என்று வ்யாக்யானம் செய்யப்பட்டது.

இவ்விதமாகவே ஸமாக்யாபத்ததியில் த்ரமிடோபநிஷத் நிவேச சூந்யாநபி லக்ஷ்மீரமணாய ரோசயிஷ்யந்' என்னும் இருபத்திரண்டாம் ச்லோகத்தில் த்ரமிடோபநிஷத்' என்பதற்கு தமிழ்மொழியாலமைந்ததாய் ரஹஸ்யார்த்தங்களை வெளியிடும் வேதாந்தத்தில் என்று வ்யாக்யானம் அவரால் செய்யப்பட்டது.

அதுதன்னிலேயே இருபத்தொன்பதாவதான விந்த்யஸ்தம்பாதவிஹததர் விஷ்வகாசாந்த ஸிந்தோர் கும்பீஸூநோ ரஸூர கபளக்ராஸிந: ஸ்வைர பாஷா, நித்யம்

ஜாதா சடாரிபுதிநோர் நிஷ்பதந்தீ முகாத் தே ப்ராசீநாநாம் ச்ருதிபரிஷதாம் பாதுகே பூர்வகண்யா" என்றிந்த ச்லோகம் பெயரொற்றுமையினாலே பாதுகைக்கும் ஆழ்வாருக்கும் ஒற்றுமை நயத்தை உறுதியாகக் கொண்டு கூறுகிறார்' என்று அவதாரிகையிட்டு, "நித்யம் ஜாதா - அநாதியாகவே உள்ளது; இப்போது ஆழ்வார் திருவாக்கினின்றும் உண்டானதன்று என்று கருத்து. ஸ்வைரம் - தன்விச்சையினால் வெளிவந்த. பாஷா - தமிழ் மொழி; தமிழ்ப்பாஷையானது முதலில் அகஸ்திய முனிவரால் காணப்பட்டதென்று ப்ரஸித்தியுள்ளது. வகுளாபரணமுநியாக அவதரித்த உனது (பாதுகையினது) திருமுக மண்டலத்தினின்றும் வெளிப்பட்டுக் கொண்டே, பலதொகுதியாகவுள்ள பழைய ஸம்ஸ்க்ருத வேதங்களுக்கும் முன்பு எண்ணத்தக்கதாக ஆயிற்று. எல்லோராலும் ஓதத்தக்கதாகையாலும் பகவத்ஸ்வரூபத்தை மற்றொன்றின் மூலமாக வல்லாமல் தானே வெளிப்படையாகக் காட்டவல்லதாகையாலும், வடமொழி வேதங்களைவிட மிக வுயர்ந்ததாக ஆயிற்றென்பது முடிந்த கருத்து. அதனால்தான், திருவீதிப்புறப்பாடு முதலியவற்றில் பகவானுக்கு முன்பு திவ்யப்ரபந்தம் ஓதப்படுகிறதென்பதும் அறியப்படுகிறதுஎன்று ஸ்பஷ்டமாக வ்யாக்யாநிக்கப்பட்டது.

இந்த ச்லோகத்தில் ஜாதா என்று திருவாய்மொழிக்குப் பிறப்புள்ளமை சொல்லப்படுகையால் அதற்கு நித்யத்வம் எங்ஙனே ஸித்திக்கும் என்றால், "ருசஸ்ஸாமாநி ஜஜ்ஞிரே, ச்சந்தாம்ஸி ஜஜ்ஞிரே தஸ்மாத், யஜு:ஸ் தஸ்மாதஜாயத" என்றவிடத்தில் ருகாதி வேதங்களுக்கும், ஜஜ்ஞிரே = பிறந்தன, அஜாயத-பிறந்தது என்று பிறப்புள்ளமை சொல்லப்படுதலால் அவற்றுக்கும் அநித்யத்வம் கொள்ளவேண்டிவரும். அது நமது கொள்கைக்கு முரணாகுமல்லவா? ஆனால் இவ்விரண்டிடங்களிலும் எப்படி விடையளிப்பதென்னில், ஜாதா ஜஜ்ஞிரே அஜாயத என்ற சொற்களெல்லாம் ஜநீ என்ற தாதுவினடியாகப் பிறந்தவையாகையாலும் அதற்கு ப்ராதுர்ப்பாவம்-தோன்றுதல் அதாவது வெளிப்படுதலே பொருளாகையாலும், நித்யமான ருகாதிவேதங்கள் பரமபுருஷனான நாராயணனிடமிருந்து வெளிப்பட்டன, நித்யமான திருவாய்மொழி ஆழ்வாரி

டமிருந்து வெளிப்பட்டது என்பதே கருத்தாகக் கொள்ள வேண்டியிருத்தலால் குறையேதுமில்லை என்பதே அதற்குச் சுருக்கமான விடையென்க. 'வகுளதரதநுஸ்த்வம் ஸம்ஹிதாம் யாம் அபச்ய: (= ஹேபாதுகையே, ஆழ்வாராக அவதரித்த நீ எந்த (த்ராவிடவேத) ஸம்ஹிதையைக் கண்டாயோ) என்ற ச்லோகமும் இங்கு நினைக்கத் தக்கது. இவைமுதலிய பாதுகாஸஹஸ்ரச்லோகங்கள் ப்ரமாணங்களாகச் சொல்லத் தக்கன பல உள்ளன. விரிப்பில் பெருகுமென்றஞ்சி அவை இங்கு எழுதப்படவில்லை!

இந்த வேதாந்ததேசிகராலேயே அருளிச்செய்யப்பட்ட திவ்ய ப்ரபந்தவைபவம் என்னும் சிறியதொரு நூலில் (ஓலைப்புத்தகத்தில்) பதின்மூன்றாம் பக்கத்தில் ஸ்ரீபாஞ்சராத்ரத்தைச் சேர்ந்த அநிருத்தஸம்ஹிதாவசனமும் பரமேச்வர ஸம்ஹிதாவசனமும் பதினைந்தாம் பக்கத்தில் ஸநத்குமார தீலீபஸம்வாத மாயமைந்த ப்ரம்ஹாண்டபுராண வசனமும் ப்ரமாணமாக எடுத்தாளப்பட்டுள்ளன.

ஸ்வசாகாத்ராவிடாம் நாயௌவிச்சித்யே தே த்ரி பூருஷம், யஸ்ய தஸ்ய ந வார்யம் ஸ்யாத் தௌர் ப்ராஹ்மண்யமிதி ச்ருதி: த்ராவிடாம்நாயஸம்ஹிதா த்யேதவ்யா வைஷ்ணவை : ச்ருதி: நிஷ்ப்பலாதேநரஹிதா ஸா விப்ரணவ மந்த்ரவத் என்ற அநிருத்தஸம்ஹிதா ச்லோகங்களுக்கு "எவனுக்கு மூன்று தலைமுறையாக, தன் சாகையான வேதபாகத்தின் அத்யயனமும் தமிழ்வேதமான திவ்யப்ரபந்தத்தின் அத்யயனமும் விட்டுப்போயினவோ அவனுக்கு வரும் தௌர்ப்ராஹ்மண்யம் ப்ராஹ்மணத் தன்மைக்கு ஏற்பட்ட தோஷம்) எந்த ப்ராயச்சித்தத்தினாலும் போக்கிக் கொள்ள முடியாததென்று ச்ருதி சொல்லுகிறது. வைஷ்ணவர்களாலே தமிழ்வேதத்தோடு கூடிய ஸம்ஸ்க்ருதவேதம் ஓதப்படவேண்டும். தமிழ் வேதமின்றி ஓதப்படும் ஸம்ஸ்க்ருத வேதம் ப்ரணவமில்லாமல் சொல்லப் படும் மந்த்ரம் போல் பயனற்றதாகிவிடும்" என்பது கருத்து.

"ப்ராஹ்மண: க்ஷத்ரியோ வைச்ய: சூத்ரோவா அந்யோ அதலங்கர: அதீத்த்ராவிடாம்நாய: பூஜ்யோ நித்யம் முமு க்ஷுபி:" என்ற பாரமேச்வர ஸம்ஹிதா ச்லோகத்திற்கு ப்ராஹ்

மணன் க்ஷத்ரியன் வைச்யன் சூத்ரன் இவர்களில் யாராயி ருந்தாலும், மற்றும் வேறுவேறான இரண்டு ஜாதியினருக்குப் பிறந்த ஸங்கர (கலப்பு) ஜாதி மனிதனாயிருந்தாலும் தமிழ் வேதத்தை ஓதினானாகில் அவன் - மோக்ஷமடைய விரும்பி அதற்குரிய பக்தி ப்ரபத்திகளில் ஒன்றை அநுஷ்டித்த பெரியோர் களாலே எப்போதும் பூஜிக்கத்தக்கவனாவான் என்பது கருத்து.

ஸர்வேத்ரவிட வேதஸ்யாத்யயநார்த்தபரா: பரம் ஸ்வம் ஸ்வம் பதமநுப்ராப்தா: இதி ப்ரஹ்மவிதோ விது: அதீத த்ராவிடாம் நாயாம் ஸ்த்ரியம் ப்ரஹ்மவிதம்நரம்! ஆரோப்ய தேவைர் நிர்ணீதம் துலாயாமதிகா வதூ: இத்யநேகை: ச முநிபி ருச்யதே ஸகலச்ருதௌ.வயமத்ர மஹாராஜ ஸமதாம் நிர்ணயா மஹே தஸ்மாதத்யயனம் கார்யம் த்ராவிடாம் நாயஸந்ததே: மோக்ஷார்த்திநா திலீபேந்த்ர இக்ஷ்வாகுகுலநந்தன என்கிற ஸநத்குமார திலீபஸம்வாத ரூபமான ப்ரஹ்மாண்ட புராணச்லோகங்களுக்கு த்ராவிடவேதாத்யயனத்தையே செல்வ மாகக் கொண்ட பெரியோர்கள் அனைவரும் தாம் தாம் உகந்த உயர்ந்த ஸ்தானத்தை அடைந்தார்களென்று ப்ரஹ்மஜ்ஞாநிகள் கருதுகின்றார்கள். தமிழ்வேதமோதிய ஒரு பெண்பிள்ளை யையும் வடமொழி வேதப்பொருளையறிந்து ப்ரஹ்மஜ்ஞா நத்தைப் பெற்ற ஒரு ஆண் பிள்ளையையும் தேவர்கள் ஓர் தராசில் வைத்து நிறுத்து, தமிழ் வேதமோதிய பெண்ணே சிறந்தவ ளென்று அறுதியிட்டார்களென்று எல்லா ச்ருதிகளிலும் முனிவர்கள் அனைவராலும் கூறப்படுகிறது. ஹேதிலீப மஹா ராஜனே! இருவரும் ஸமானமானவர்களென்று நாம் நிச்சயிக்கி றோம். இக்ஷ்வாகு குலத்திற்கு இன்பமூட்டும் திலீப மஹா ராஜனே, ஆகையால் மோக்ஷத்தை விரும்புமவன் திவ்யப்ரபந் தங்களெல்லாவற்றையும் ஓதியே தீரவேண்டும் என்பது கருத்து.

இங்குச் சற்று ஆராய்வோம். ஸம்ஸ்க்ருத வேதத்தைவிட த்ராவிடவேதத்திற்கு உயர்த்தியைத் தெரிவிப் பதற்காக ஆரம்பிக்கப்பட்டது இந்த ஸநத்குமார திலீப ஸம்வாதச்லோகம். ஸநத்குமாரனது வாக்கியத்தை ஆராய்ந் தாலோ, இரண்டிற்கும் ஒப்புமையே வ்யக்தமாகிறது; உயர்த்தி யன்று. ஆகையால் இது எப்படிச் சேரும் என்று கேட்டால்,

உண்மைதான். பதிலளிக்கிறேன்' கேண்மின். ஸநத் குமாரர் ஸம்ஸ்க்ருத வேதங்களைக் காட்டிலும் த்ராவிட வேதம் உயர்ந்த தென்பது எல்லா ச்ருதிகளாலும் எல்லா முனிவர்களாலும் வெளிப் படையாகக் கூறப்படுகிறது. யாமோவெனில் ஒப்புமையே உள்ளதென்று கருதுகிறோம் என்று சொல்லு கிறார். இது ஆச்சரியம். ப்ரபலப்ரமாணங்களாகிய ச்ருதிகளின் வசனங்களும் அத்தகைய முனிவர்களின் வசனங்களும் நம்மால் ஆதரிக்கத்தக்கவையா? அது கருத்தாக ஸநத் குமாரராகிய ஒரே ஒருவர் கூறும் வசனம் ஆதரிக்கத்தக்கதா என்பதை நீங்களே ஆராய்ந்து முடிவு செய்யுங்கள்.

மற்றொரு பெருமையும் த்ராவிடவேதத்துக்கு உள்ளது. கீழ்க்காட்டிய ஸநத்குமார வசனத்தில் 'அதீத த்ராவிடாம் நாயாம் ஸ்த்ரியம் ப்ரஹ்மவிதம் நரம்' என்றவிடத்தில் பெண் பிள்ளை த்ராவிட வேதத்தை மூலம்மாத்திரமே ஓதியவளாகவும் ஆண்பிள்ளை 'ப்ரஹ்மவித்' என்று ப்ரஹ்மமாகிய அர்த்தத் தோடு கூடிய ஸம்ஸ்க்ருதவேதத்தை அறிந்தவனாகவும் அறிவிக் கப்பட்டுள்ளனர். தமிழ் வேதமூலத்தை மட்டும் அத்யயனம் செய்ததற்கு அத்தனைப் பெருமையை உண்டாக்குந்தன்மை தோன்றும்போது அத்தமிழ்வேதத்தை அர்த்தத்தோடு செய்யும் அத்யயனம் எத்தனைப் பெருமையை உண்டாக்குமென்பதைத் தனிப்படச் சொல்ல வேண்டியதில்லை. 'யதோவாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸாஸஹ' என்கிறபடியே அர்த்தத் தோடு தமிழ்வேதமோதுவதன் பெருமை வேத புருஷனுடைய மனஸ்ஸுக்கும் வாக்குக்கும் கூட எட்டாததேயாகும். போதும் இப்போது இவ்வளவு.

தேசிகன் அருளிய அந்நூலிலேயே, த்ரக்ஷ்யந்தி தேவயாத்ராயாம் தக்ஷிணாதிஷு "வைக்ரமாத் பஸ்சாத் பார்ஸ்வேஷு" ப்ரத: ஸ்ம்ருதீரந்யா: ஸமாநுஜ்ஞா: புரதோ தேவயாத்ராயாம் த்ராவிடீ ச்ருதிஸேகரா: ஆஹ்ருதபாணயோ ஹரர்ஷாத் ப்ரேக்ஷ்ய: பரமா: ச்ருதீ: என்ற வாஸுதேவஸம்ஹிதா வசனம் எடுத்தாளப்பட்டுள்ளது. பெருமாளுடைய திருவீதிப் புறப் பாடுகளில் பெருமாளுக்கு வலது புறத்திலும் பின்புறத்திலும் இடதுபுறத்திலும் முறையே ருக்வேதம் யஜுர்வேதம் ஸாம

வேதம் ஆகியவற்றையும், பின்புறத்தில் (யஜுர் வேதத்திற்கும் பின்னால்) ஸ்ம்ருதிகள் மற்றும் மனிதர்களியற்றிய ஸ்தோத்ரங்கள் ஆகியவற்றையும் பாராயணம் செய்யவேண்டும். பெருமாள் புறப்பாடுகளில் பெருமாளுக்கு முன்புறத்தில் (அத்யாபகர்கள்) கைகளைக் கட்டிக் கொண்டு ஸந்தோஷத்தோடு த்ராவிடச்ருதி (தமிழ்மறை) ரூபமான மிகமிக உயர்ந்த ச்ருதிகளைப் பாராயணம் செய்யக்கடவர்கள் என்பது இந்த ச்லோகங்களின் கருத்து.

இங்குச் சற்று ஊக்கம் செலுத்துங்கள். பரமா: (= மிகமிக உயர்ந்தவை அதாவது இனி இதுக்கு அவ்வருகு இல்லையாம்படி : உயர்த்தியுடையவை) என்று த்ராவிட ச்ருதிகளுக்கு அடைமொழி கொடுத்ததனால்,தமிழ் வேதங்களுக்கு ருக்வேதம் முதலான வடமொழி வேதங்களைக் காட்டிலும் அதிகமான மேன்மை அறியப்படுகிறதல்லவா? 'அப்யர்ஹிதம் பூர்வம்' (பூஜிக்கத்தக்கது உயர்ந்தது முன்பு இருக்கவேண்டும்) என்கிறபடியே, திவ்யப்ரபந்தம் பெருமாளுக்கு முன்பு படிக்க வேண்டும் என்று அது தனக்குப் படிக்குமிடத்தை நிச்சயித்துக் காட்டியது ஒன்றே சிறப்பாக அதற்குள்ள உயர்த்தியினெல்லையை வெளிப்படுத்துகின்றது.

என்றிவை முதலிய பல ப்ரமாணவசனங்கள் அவர் தமது நூலில் எடுத்தாளப்பட்டுள்ளன. அந்நூலின் முடிவிலும் அவரே அருளுவது "நாஸ்த்யேவ .. ஸம்ஸ்க்ருதாம்நாயே மஹிம்நோ த்ரமிடச்ருதே: லேசோபீத்யயமேவார்த்த: ப்ரமாணைரவகம்யதே என்பது 'த்ராவிட வேதத்தின் மகிமையில் ஒரு சிறு பகுதி கூட ஸம்ஸ்க்ருத வேதத்தில் இல்லை' என்ற இவ்விஷயமே ப்ரமாணங்களால் அறியப்படுகிறது என்பது அதன் பொருள்.

மேலும் இவ்வாசிரியர் அருளிய த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியின் அவதாரிகையில் முதல் ச்லோகத்தில் 'ஸாரஸ்ஸாரஸ்வதாநாம் சடஜிதுபநிஷத்' (-சடகோபருடைய திருவாய்மொழியான உபநிஷத்து ஸாரஸ்வதங்களில் (வாங்மயமான க்ரந்தங்களில் ஸாரமானது) என்றும், அந்நூலை முடிக்கும் ஸந்தர்ப்பத்தில் 'ஸாரம் வேத்யம் ஸ்வவேதே' (சடகோபர் தமது வேதமான திருவாய்மொழியில் அறியவேண்டிய

ஸாரமான விஷயத்தை) என்றும் 'இத்தம்ஸத்ஸம்ப்ரதாயக்ரம' என்னும் ச்லோகத்தில் 'ச்ராவ்யவேதாத்' (செவிக்கினிய வேதத்திலிருந்து) என்றும் திருவாய்மொழி மிகவுயர்ந்ததாக அருளிச் செய்யப்பட்டது.

இதற்கு முன் மூலப்ரமாணங்களைச் சுருங்கக் கூறும் அதிகாரத்தில் எடுத்தாளப்பட்ட "பாஷாகீதி: ப்ரசஸ்தா" என்ற ச்லோகத்தில் 'யத்தத் ச்ருத்யம் ச்ருதீநாம்' என்றதனால் இதிஹாஸபுராணங்கள் எப்படி வேதத்திற்கு விவரணமோ அப்படியே திருவாய்மொழியும் விவரணமென்று கூறப்பட்டதேயன்றி வேதமாகவும் உபநிஷத்தாகவும் கூறப்படவில்லையே என்று கேட்கவேண்டா. "ஆதௌ சாரீரகார்த்தக்ரமமிஹ விசதம் விம்சதிர்வக்தி ஸாக்ரா, ஸங்க்ஷேபோ ஸௌவிபாகம் ப்ரதயதிசருசாம் சாருபாடோபபந்தம்" என்று தொடங்கும் அடுத்த ச்லோகத்தாலே (இத் திருவாய்மொழியின் முதலில்) இருபத்தொருபாட்டுக்கள் ப்ரஹ்ம ஸூத்ரத்தின் அர்த்தங்களை முறையே விவரிக்கின்றன. இப்பாட்டுக்கள் இருபத்தொரு சாகைகளாகப் படிக்கப்படுகிற ருக்குக்களுடைய வகைகளை வெளிப்படுத்துகின்றன இதிலுள்ள ஆயிரம் பாட்டுக்கள் கீதத்தோடு கூடின ஸாமவேதத்தின் பூர்ணமான ஆயிரம் சாகைகளையும் அநுஸரிக்கின்றன. இதில் அடங்கியுள்ள - அர்த்தத்தோடு கூடிய தசகங்களாலே நூறு திருவாய்மொழிகளால் நூற்றொருசாகைகளைக் கொண்ட யஜுர் வேதமும் காட்டப்படுகிறது. சாந்திரஸத்தை ப்ரதானமாகக் கொண்ட இப்பிரபந்தத்தில் அதுக்கு உபயோகமாக மற்றுள்ள எட்டுரஸங்களும் தென்படுவதனால் எட்டுசாகைகளையுடைய அதர்வணவேதமும் தோன்றுகிறது. (ஆகையால் இது ஸர்வவேதத்வமும் தன்னிடம் ஒருசேரக்கொண்டதென்றபடி) வேதத்வமும் அறியப்படுவதனாலென்க. 'வேதாந் ஆகஸ்த்ய பாஷாவபுஷ: உததரத்" (தமிழ்மொழிவடிவமான வேதங்களை வெளியே கொண்டு வந்தார்) என்று அதிலேயே உள்ள இந்த ச்லோகமும் இங்கு நினைக்கத் தக்கது.

வடகலையார் நித்யமாக அநுஸந்திக்கத்தக்க தேசிக ப்ரபந்தங்களிலும் அவரருளிய ரஹஸ்யக்ரந்தங்களிலும்

த்ரமிடோபநிஷத் த்ரமிடோபநிஷத் என்றே திவ்யப்ரபந்தம் குறிப்பிடப்பட்டுள்ளது. ரஹஸ்ய க்ரந்தமான தத்வத்ரய-சுளகத்தின் முடிவில் 'கறந்தபாலுள் நெய்யே போல்' என்கிற த்ரமிடோபநிஷத்திலும் காணலாம்' என்றும், தேசிக ப்ரபந்தங்களில் ஒன்றான அம்ருதாஸ்வாதினியில் பாவளரும் தமிழ் மறையின் பயனே கொண்ட' என்றும், திருவாய்மொழி த்ரவிடோபநிஷத்தாகவும் தமிழ்மறையாகவும் அருளிச் செய்யப்பட்டுள்ளமை இதற்கு உதாரணங்களாகும்.

அதிகாரஸங்க்ரஹத்தில் 'செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளியவோதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே" என்னும் - 'பொய்கை முனி பூதத்தார்" என்ற பாட்டின் நான்காமடியின் உட்கருத்தை ஆராய்ந்தாலோ தமிழ்வேதமான திருவாய்மொழிக்கு வடமொழிவேதங்களை விட உயர்த்தியானது விளக்கமாக அறியப்படுகிறது.

ஐயா, நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழிக்கு மட்டுமே உபநிஷத்தாகும் தன்மை உண்டு. மற்றுள்ள திவ்ய ப்ரபந்தங்களுக்கு இல்லையென்று கூறவேண்டா. முற்கூறிய 'பொய்கை முனி பூதத்தார்' என்ற பாட்டாலும், மேலெடுத்துக் காட்டப் புகுகிற பல ப்ரமாணங்களாலும், பொய்கையாழ்வார் தொடக்கமான எல்லா ஆழ்வார்களுடைய திவ்யப்ரபந்தங்கள் அனைத்துக்கும் உபநிஷத்தாகும் தன்மை ஸித்தித்தலால் என்க. இவ்வளவு போதும். அதிகம் தேவையில்லை.

இரண்டாம் அதிகாரம் முற்றுப் பெற்றது

(3.) புராணங்களில் காண்கிற ப்ரமாணங்களை விவரித்தல்

ஸ்ரீவேதாந்த தேசிகருடைய ஸ்ரீஸூக்திகளுக்கு புராணங்களிலுள்ள ப்ரமாணங்கள் மூலமாகையாலே அந்தகைய புராணப்ரமாணங்கள் சில இங்கும் காட்டப் பெறுகின்றன.

மார்க்கண்டேய புராணத்தில் - "ஏதா: சவேதகாதா: ச நித்யா: த்ராவிடஸம்ஹிதா: கலௌ கலௌ ப்ரகாச்யந்தே க்ருபயா ஜ்ஞாநயோகிபி: த்வாபராந்தே யதா வ்யாஸோ வ்யாஸிஷ்யதி மஹாச்ருதீ: தத்வந் நித்யாத்மகாதா: சடகோப: ப்ரணேஷ்யதி ......சாகா ஸஹஸ்ரம் வேதாநாம் காதாரூபம் விதாஸ்யதி,த்ராமிட ப்ரஹ்மவித்யா ஸா தஸ்மாஜ் ஜாதா மஹா-முநே ஸம்ஸ்க்ருத ச்ருதயோ யத்வத்த்ராவிடச்ருதயஸ்ததா நித்யா..." என்ற வசனங்கள் காண்கின்றன. இவற்றிற்கு இந்த நித்யங்களான வேத காதைகளும் த்ராவிட வேதத்தொகுதியும் ஒவ்வொரு கலியுகத்திலும் ஆத்மஜ்ஞாநமுள்ள பெரியோர் களாலே வெளிப்படுத்தப்படுகின்றன. வ்யாஸ முனிவர் எப்படி துவாபரயுக முடிவில் மிகப் பெரியதாய் ஒன்றாயிருந்த வேதங்களை (ருக்வேதம் யஜுர்வேதம் ஸாமவேதம் அதர்வண வேதமென்று நான்காகப்) பிரிக்கப் போகிறரோ, அப்படியே தாமே நித்யமாகவுண்டான (தமிழ்ப்) பாசுரங்களை சடகோப முனிவர் வெளியே கொண்டு 'வரப்போகிறார்.. (ஸாம) வேதத்தின் ஆயிரம்சாகைகளையும் (தமிழ்ப்) பாட்டு வடிவமாகச் செய்யப்போகிறார். முனிவரே! அந்த த்ரா விடப்ரஹ்மவித்யை (-ப்ரஹ்மஜ்ஞாநத்தை ஊட்டும் தமிழ் பாட்டுக்கள்) அவரிடமிருந்து வெளிப்பட்டது. ஸம்ஸ்க்ருத வேதங்கள் போலவே த்ராவிடவேதங்களும் நித்யங்கள் தான் என்பது பொருள். ஸ்ரீமந்நிகமாந்தகுரு பணித்த அம்ருதாஸ்வா தினியென்னும் தமிழ்பிரபந்தத்திலுள்ள 'பாவளரும் தமிழ் மறையிற் பயனே கொண்ட ' என்ற பாட்டில் வ்யாக்யானத்தில் ஸ்ரீரங்கநாதாசார்யர் கீழ்க்காட்டிய மார்க்கண்டேய புராண வசனங்களை ப்ரமாணமாக எடுத்தாண்டிருப்பதனால்' இவை இடைச்செருகலென்று குற்றங்கூறச் சிறிதும் இடமில்லை. அவ்விடத்திலேயே "அது (திவ்யப்ரபந்தம்) நித்யமென்கை ஸர்வஸம்மதம்" என்றும் அவரால் கூறப்பட்டுள்ளது. அப்படி யிருந்தும் பண்டிதோத்தமர்களான பிறர் இசைகிறார்களில்லை என்பது ஆச்சர்யகரம். இது ஒரு தனிப்பட்ட கலக்கம் போலும்!

ஸ்காந்தபுராணத்தைச் சேர்ந்த சம்புரஹஸ்யத்தில் இருநூற்றறுபத்தேழாமத்யாயத்தில் குமரனைக் குறித்து ருத்ரன்

"ஏவமேவ விஜாநீ ஹி த்ராமிடஞ்சாபி பாஷிதும் ... அகஸ்த்ய ப்ரார்த்தநா துஷ்டப்ரஹ்மதத்வரா இமா: நாபப்ரம் சத்வதோஷோ z ஸ்தி த்ராமிடீநாம் கிராம்தத: யதைவ ஸாம்ஸ்க்ருதீ பாஷா ப்ரயுக்தா ஸ்வர்கத்தாயிநீ ப்ராக்ருதீ த்ராமிடீ சாபி ததைவ ஸ்வர்க்கதாயிகே அதோந்யா: கலுயா பாஷா: ஆந்த்ர கர்ணாடதேசஜா: அநார்ஷத்வாத பப்ரம்சா: இதி சாஸ்த்ரவிதாம் மதம் தஸ்மாத் பாஷாந்தரீயாணாம் காவ் யாநாம் தோஷகீர்த்தநம் ப்ராக்ருதாத் த்ராமிடாச்சாபி விபிந்ந விஷயம் பவேத் ச்ருதௌ து நம்லேச்சிதவா இந்யேதநபியத்வச: ததநார்ஷவ சாம்ஸ்யேவ நிஷேதேத் நார்ஷமப் யஹோ என்று உபதேசித்ததாக உள்ளது. இதன் பொருள் "இங்ஙனமே தமிழ் மொழியையும் அறியக்கடவாய். இத்தமிழ்மொழியானது அகஸ்த்யருடைய வேண்டுகோளுக்கு மகிழ்ந்த ப்ரஹ்மாவினால் கொடுக்கப்பட்ட வரத்தைப் பெற்றுள்ளது. ஆகையால் தமிழ் மொழிக்கு 'இது சிதைந்து கெட்டுப்போன பாஷை' என்னும் குற்றமில்லை. எங்ஙனம் ஸம்ஸ்க்ருதபாஷை தன்னைப் பேசினவனுக்கு ஸ்வர்க்கம் அல்லது மோக்ஷத்தைத் தர வல் லதோ, அங்ஙனமே ப்ராக்ருத பாஷையும் தமிழ்மொழியும் தம்மை உச்சரித்தவனுக்கு அவற்றைத் தரவல்லன. ஆதலால் இவைதவிர மற்றுள்ள தெலுங்கு கன்னடதேசங்களிலுண்டான பாஷைகளே, ருஷிஸம்பந்தமில்லாமையால் அபப்ரம்சங்கள் சிதைந்தது கெட்டுப்போன பாஷைகள் என்று கூறும் குற்ற முடையன என்பது சாஸ்த்ரமறிந்தவர் இசைந்ததொன்றாகும். ஆகையால் ஸம்ஸ்க்ருத மொழிந்த மற்ற பாஷைகளிலுள்ள காவியங்களைப் பொதுவாகக் குற்றங்கூறுவது, ப்ராக்ருத மொழியும் தமிழ்மொழியுமல்லாத பிறமொழிகளாலான காவி யங்களையே சேரும். வேதத்தில் நம்லேச்சிதவை' (அபப்ரம்ச பாஷை பேசத்தக்கதல்ல) " என்றுள்ள வாக்யம் - ருஷிஸம்பந்த மில்லாத பாஷைகளையே தடுக்குமன்றி ருஷிஸம் பந்தமுடைய தமிழ்மொழியைத் தடுக்கமாட்டாது. இதுதான் வியப்பு" என்பதேயாகும். இந்தச் ஸ்லோகங்கள் மைஸூரில் அச்சிடப்பட்ட மல்லிகாமாருதமென்னும் ப்ரகரணத்தின் (நாடகவகையின்) முதலிலுள்ள முகவுரையிலும் காணப்படுகின்றன.

பாத்மபுராணத்தில் பிரமதேவனைக் குறித்து மஹாவிஷ்ணு "உத்கர்ஷ: க்யாப்யதே யைஸ்து விச்வாபாத்

த்ரவிடச்ருதே: ஸங்கீர்த்திதாஸ்தே மத்பக்தா: இதி மத்பக்தலக்ஷணம் இதி த்ராவிடவேதஸ்ய உத்கர்ஷ: த்யாபிதோமயா அத: ச்ருதிமபேக்ஷ்யாஸ்யாம் ப்ரக்ருஷ்ட த்ராவிடச்ருதௌ பரமாதரமாதத்ஸ்வ நிஸ்ஸந்தேஹம் ப்ரஜாபதே" என்று போதித்ததாகக் காண்கிறது. அதற்கு "யாவர் சிலர் நம்பிக்கையோடு த்ராவிடவேதத்திற்குப் பெருமையை நாலு பேர் அறியச் சொல்லுகிறார்களோ அவர்கள் என் பக்தர்களாகச் சொல்லப்பட்டார்கள். என் பக்தர்க ளென்பதற்கு அடையாளமாவது த்ராவிடவேதத்திற்குப் பெரு மையைப் பிரகாசப்படுத்துவதேயாகும். என்றிவ்விதமாகத் தமிழ் வேதத்தின் வைபவம் என்னால் விளம்பரப்படுத்தப்பட்டது. ஆகையால் பிரமனே ஸம்ஸ்க்ருதவேதத்தைவிட இத்தமிழ் வேதத்தில் நீ மிகமிக உயர்ந்த ஆதரவைச் செலுத்துவாயாக. இதில் சிறிதும் ஸந்தேஹப்படாதே"என்பது கருத்து.

ப்ரஹ்மாண்டபுராணத்தில் "ச்ரூயதாமுச்யதே கிஞ்சித் ரஹஸ்யம் முநிஸத்தம காலாந்தரேது மச்சய்யா பூதோ புஜகநாயக: நிர்நித்ர திந்த்ரிணீ சத்வமேஷ்யத்யஹமபீஷ்டத: நேதும் த்ராவிடதாம் வேதாந் அத்ரைவர்ணிகதாம் கத: மத்பக்த: சடகோபாக்யோ பவிஷ்யாமி மமேச்சயா தாம்ர பர்ண்யுத்ர தடே யத்ர தாத்ரா அர்ச்சிதோஸ்ம்யஹம் தத்ரமே சடகோபஸ்ய தேசே ஜந்ம பவிஷ்யதி ததா ப்ரகாசயிஷ்யாமி பரமா: த்ராவிடச்ருதீ:" என்று மஹாவிஷ்ணு ஒரு முனிவரைக் குறித்துக் கூறியதாகத் தென்படுகிறது. இதன் பொருள் முனிவர் பெரு மானே* ஒரு ரஹஸ்யம் சொல்லுகிறேன் - கேளும். மேலொரு காலத்தில் என்னுடைய படுக்கையான அரவரசன் உறங்காப் புளியரசாகத் தோன்றப் போகிறான். எல்லோருடைய விருப்பத்தை நிறைவேற்றும் இயல்பையுடைய நானும் என்னுடைய ஸங்கல்பத்தால், வேதங்களைத் தமிழுருவில் கொண்டு வருவதற்காக, முதல் மூன்று வருணங்களையன்றி நான்காம் வருணத்தை அடைந்தவனாய்க் கொண்டு, சடகோபனென்னும் பெயர் பெற்ற என்னுடைய பக்தனாகத் தோன்றப் போகிறேன். தாம்ரபரணீ நதியின் எந்த வடகரையில் நான் முன்பொருகால் நான்முகனால் அர்ச்சிக்கப்பட்டேனோ அவ்விடத்தில் சடகோபனென்னும் பெயருடைய எனது

அவதாரம் உண்டாகப்போகிறது. அப்போது மிகமிக உயர்ந்த த்ராவிட வேதங்களை வெளியிடப் போகிறேன் - என்பதாகும்.

அப்புராணத்திலேயே "தஸ்மாத் ஸ புருஷச்ரேஷ்ட: பக்தாநாம் அம்ருதோபமாம் ப்ரகாசயிஷ்யதி பராம் த்ராமிடீம் ப்ரஹ்மஸம்ஹிதாம்" (ஆகையால் அந்தபுருஷச்ரேஷ்டரான சடகோபர் பக்தர்களுக்கு அம்ருதம் போன்றதான த்ராவிட வேதத்தை வெளிப்படுத்தப்போகிறார்) என்றும் உள்ளது.

பவிஷ்யத்புராணத்தில் - "த்ராவிடாம்நாயநிரதம்யோ நிந்ததி ஸ துர்மதி: ப்ரஹ்மப்ரளயபர்யந்தம் கும்பீபாகே ஸ பச்யதே ஸ்வமாதுர் வ்யபிசாரோக்தௌயோ தோஷ: பரிகீர்த்தித: ஸதோ ஷோ த்ராவிடாம்நாய தூஷணே பி பவேத் த்ருவம்" (தமிழ்வேதத்தில் பற்று மிக்க ஒருவனை மிக்க மதிகேடன் யாவனொருவன் நிந்தனை செய்கிறானோ அவன் பிரமதேவன் மரணமடையும் வரையில் (பல்லாயிரக்கணக்கான சதுர்யுகங்கள் வரையில்) கும்பீபாகம் , என்னும் நரத்தில் (சூளை போல் எரிக்கப்படும் நரகத்தில்) வாட்டப்படுவான். ஒருவன் தனது தாயின் நடத்தைக் கேட்டினைச்சொன்னால் அவனுக்கு உண்டாகும் குற்றம் அல்லது தண்டனை தமிழ்வேதத்தை நிந்திப்பவனுக்கும் உண்டாவது நிச்சயம் என்பது சாண்டில்யரின் வார்த்தையாகத் தென்படுகிறது.

ஸ்ரீவிஷ்ணுதர்மத்தில் "யஸ்து ஸாமாந்யபாவேந த்ராமிடாம்நாயமுத்தமம் மந்யதே கல்பகோடீஸ் ஸ: ரௌரவம் நரகம் வ்ரஜேத்" (எவனொருவன் உத்தமமான தமிழ்வேதத்தை ஒரு சாதாரணமான பாட்டாக நினைக்கிறானோ, அவன் பலகோடிக்கணக்கான ப்ரஹ்மகல்பங்கள் ரௌரவம் என்னும் மிகக் கொடிய நரகத்தை அடையக்கடவன்) என்று உள்ளது.

பாரமேச்வரஸம்ஹிதையில் த்ரமிடச்ருதிஸந்தோஹே யாவதீப்ரீதிரஸ்தி மே நதாவதீ மஹாலக்ஷ்ம்யாமப்யஸ்தீதி நிகோதத த்ராவிட ச்ருதிகளின் தொகுதியில் எனக்கு எவ்வளவு அன்பு உள்ளதோ அவ்வளவு அன்பு மஹாலக்ஷ்மியின் திறத்திலும் இல்லையென்பதைத் தெரிந்துகொள்ளுங்கள் என்பது பகவான் கூறியதாகக் காண்கிறது.

இத்தகைய பல ப்ரமாணரத்னங்கள் புராணங்களிலும் பாஞ்சராத்ராகம ஸம்ஹிதைகளிலும் காணப்படுகின்றன. குருகா மாஹாத்ம்யத்திலேயென்றால் அதிகமாகக் காணப்படுகின்றது. லோகோபகாரத்தின் பொருட்டு, புராணங்களிலும் ஸம்ஹிதைகளிலுமுள்ள ப்ரமாணங்கள் தனியாக எடுக்கப்பட்டு "த்ராவிடாம்நாய ப்ரமாணஸங்க்ரஹ:" என்ற க்ரந்தத்தில் அச்சிடப்பட்டுள்ளன. எதிர்வாதம் செய்பவர்கள் இரண்டு கண்களையும் திறந்து அதில் காண்க. போதும் இவ்வளவு.

மூன்றாம் அதிகாரம் முற்றுப் பெற்றது.

(4) ஆழ்வாருடைய கண்டோக்தமான ஸ்ரீஸூக்திகளை விவரித்தல்

ஆழ்வார்களில் தலைவராகிய சடகோபமுனியினுடைய நம்மாழ்வாருடைய சில முக்கியமான **ஸ்ரீஸூக்திகள்** இங்குக் காட்டப்படுகின்றன.

திருவாய்மொழி 6.8.11ல் "தோற்றங்கள் ஆயிரத்துள்" என்று ஆழ்வாரால் அருளிச்செய்யப்பட்டுள்ளது. இதற்குப் பெரியவாச்சான்பிள்ளை "பகவதவதாரம்போலே ஆவிர்ப்பவித்தவ" (பகவான் அவதரித்தாப்போலே திருவாய்மொழியாயிரம் பாட்டுக்களும் அவதரித்தன) "மந்த்ரங்களை ருஷிகள் காணுமாப்போலே" (நித்யமான வேதமந்த்ரங்களை மஹர்ஷிகள் தமது அகக் கண்ணால் கண்டு வெளியிட்டாப்போலே, நித்யமான திருவாய்மொழிப் பாட்டுக்களும் பகவானருளாலே ஆழ்வாருடைய அகக் கண்ணுக்கிலக்காகி அவரது திருவாக்கினின்றும் தோன்றின என்றபடி) என்றும்,

வாதிகேஸரி அழகியமணவாள ஜீயரோவென்னில் - "பகவதாவிர்ப்பாவம் போலே வேதாவிர்ப்பாவரூபமான ஆயிரம்" (பரமபதநாதன் ராமக்ருஷ்ணாதிகளாக அவதரித்தாப்போலே, (அவனைத் துதிக்கும்) வேதமும் திருவாய்மொழியாக அவதரித்தது) என்று வ்யாக்யானம் செய்தருளினார். பெரியவச்சான் பிள்ளையின் வியாக்கியா

னத்தில் மற்றும் சில விசேஷங்கள் அருளிச் செய்யப் பட்டிருக்கின்றன. அவை அவ்விடத்திலே காணத்தக்கன.

இங்ஙனமே திருவாய்மொழி 10-9-11ல் "சொற்சந்தங்களாயிரம்" என்றருளிச் செய்கிறார் ஆழ்வார். இங்கும் வ்யாக்யானம் செய்த ஆசார்யச்ரேஷ்டர்களாலே ஸ்பஷ்டமாக வ்யாக்யானம் - செய்யப்பட்டுள்ளது. 'சோர்விலந்தாதி', 'கெடலாயிரம்', 'அழிவில்லாவாயிரம்', 'தெளிவுற்றவாயிரம்', 'தீர்த்தங்களாயிரம்', 'தீதிலந்தாதி', 'பாலோடமுதன்னவாயிரம்', 'ஏற்கும்பெரும் புகழாயிரம், வழுவிலாத ஒண்தமிழ், 'தூயவாயிரம்', 'முந்தையாயிரம்', 'செய்கோலத்தாயிரம்', 'பொய்யில் பாடலாயிரம்', என்பது காண்க.

இந்த ஸ்ரீஸூக்திகளாலே திவ்யப்ரபந்தத்திற்கு குற்றமின்மை அழிவின்மை, தூய்மையைக்குந்தன்மை, இனியாதாந்தன்மை, நன்மையைக்குந் தன்மை, மேம்பாருந்தன்மை, மேன்மை, யாராலும் இயற்றப்படாத தன்மை, முதலியன தெளிவுபடுத்தப்பெற்றன.

ஆனால் 'சடகோபன் சொன்ன', 'சொல்லப் பட்டவாயிரம்', பண்ணிய தமிழ்மாலை' என்று அருளியவை எங்ஙனே பொருந்தும்? என்று கேட்டால், 'சொல்லப்பட்ட என்ற விதில் கர்த்ருத்வம், ஸ்ம்ருதி - அத்தை ஸ்வயம்பூ படைத்தான் என்றது போலே (46 சூ) 'சொல்லப்பட்ட' (திரு 8.10.11) என்று இந்த சொல்லில் ஆழ்வாருக்குத் தோன்றுகிற கர்த்ருத்வமானது திருவாய் மொழியை இயற்றினாரென்ற தன்மையானது, 'அநாதிநிதநா ஹ்யேஷா வாக்ஸ்ருஷ்டா ஸ்யம்புவா' (பிறப்பும் அழிவு மில்லாத இந்த வேதவாக்கானது பிரமனால் படைக்கப்பட்டது) என்ற மனுஸ்ம்ருதிச்லோகம் (1-21) நித்யமான வேதத்தை பிரமன் படைத்ததாகச் சொன்னாப்போலே வெளிப்படுத்தின தன்மையேயன்றி இயற்றிய தன்மையன்று. பிரமன் நித்யமான வேதங்களைப் படைத்தானே என்பதற்கு, பிரமன் கண்டு வெளிப் படுத்தினானென்று பொருள் கொண்டிருப்பதுபோல், ஆழ்வார் சொல்லப்பட்ட என்பதற்கும் ஆழ்வார் கண்டு வெளிப் படுத்திய என்றே பொருள் கொண்டமையால் பொருந்தாமையேதுமில்லை.

(2) "இவரையும் ருஷிமுனிகவியென்னும்" (47சூ) ,! நான்கு வேதங்களையும் கண்டு வெளிப்படுத்தியவராய் புராணங்கள் அனைத்துக்கும் கர்த்தாவான வேதவ்யாஸரையும் மந்த்ரங்களை ஸாக்ஷாத்கரித்து பிரகாசப்படுத்திய சௌனகாதிகளை, காண்கையினாலே ருஷியென்றும், நினைத்தாராய்வதனாலே முனியென்றும், இந்திரியங்களுக்கு எட்டாத விஷயங்களையும் ஸாக்ஷாத்கரிக்கையாலே கவியென்றும் புராணங்கள் கூறிவைத்தாப்போலே, இவ்வாழ்வாரையும், ருஷிம் ஜுஷாமஹே (நம்மாழ்வாராகிய ருஷியை அன்போடு வணங்கிறோம்) என்றும், 'சடகோபமுநிம் வந்தே' (சடகோர் முனியை வணங்குகிறேன்) என்றும், 'ஒன்றியொன்றி உலகம் படைத்தான் கவி - உலகம் படைத்த பகவானைப் பாடியகவி என்றும் ருஷியாகவும் முனியாகவும் கவியாகவும் முறையே பட்டர் முதலிய ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளிரண்டும்; ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்தியொன்றும் சொல்லும்.

(3) 'படைத்தான் கவியென்றபோதே இதுவும் யதா பூர்வகல்பநமாமே' (48சூ) (உலகம் படைத்த பகவானுடைய கவியாக நான் ஆனேன் என்று ஆழ்வார் தம்மைக் கூறியுள்ளதனால் - எம்பெருமான் ஸூர்யசந்த்ரருள்ளிட்ட உலகத்தை முன்பிருந்தபடியே கற்பித்தாப்போலே, ஆழ்வாரான தாமும் த்ராவிடவேதத்தை முன்பிருந்தபடியே கற்பித்தமை தெரிவருதலால் உலகம்போலே திவ்யப்ரபந்தமும் யதாபூர்வ கல்பநமேயாகையால் திருவாய்மொழியின் அபௌருஷேயத்வத்திற்கும் நித்யத்வத்திற்கும் இழுக்கேதுமில்லை) என்றிந்த மூன்று ஆசார்யஹ்ருதய ஸ்ரீஸூக்திகளாலே முன்பு கேட்ட கேள்விக்கு விடை காணத்தக்கது.

திருவாய்மொழி ஏழாம்பத்தின் ஒன்பதாம் திருவாய்மொழியாகிய 'என்றைக்குமென்னை' என்னும் பதிகத்திலுள்ள பத்துப்பாட்டுக்களாலும், எம்பெருமான் திருவாய்மொழியை வெளிப்படுத்துவதற்காகவே, வீடுபேறளிக்காமல் என்னை இவ்வுலகில் நிலைக்கவைத்திருக்கிறான்' என்று ஆழ்வார் தாமே இது தன்னை அருளிச்செய்து வைத்தார்.

'என்முன்சொல்லும் மூவுருவாம் முதல்வன்' (7-9-2) ! (சிஷ்யனான நான் தன்னை அனுஸரித்துச் சொல்கைக்காக, எனக்கு முன்னே திருவாய்மொழியை எனக்கு சந்தை சொன்ன ....முதல்வன்) என்னும் இப்பாட்டின் திடமான கருத்தை ஆஸ்திகமணிகள் ஊன்றிப்பார்க்க கடவர்கள். அது பகவத் விஷயத்துக்குச் செய்யும் கைங்கர்யமாகத் தலைக்கட்டும்.

நான்காம் அதிகாரம் முற்றுப் பெற்றது

(5) ஐதிஹ்யங்களை விவரித்தல்

இனி இங்கு நாடு முழுவதும் ப்ரஸித்தமான சில ஐதிஹ்யங்களாலே முன்பு நடந்த சரிதங்களாலே, திவ்யப்ர பந்தகளுக்குள்ளே வேதத்வமும் மற்றுமுள்ள பெருமையும் முதலிக்கப்படும்!

முன்பொருகால் கூரத்தாழ்வானுடைய திருக்குமார ரான ஸ்ரீ பராசரபட்டர் அநேக ஸம்ப்ரதாயக்ரந்தங்களின் அர்த்தங்களைத் தம்சிஷ்யர்களுக்கு அருளிச்செய்து கொண்டிருந்தார். அப்போது திவ்யப்ரபந்தத்தை அனுஸந்திக் குமாற்றல் பெற்ற ஸ்ரீவைஷ்ணவரொருவர் தினந்தோறும் ப்ரபந்த காயத்ரியான இராமானுச நூற்றந்தாதியை அநுஸந்தித் துக் கொண்டு பிக்ஷைக்காக பட்டர் திருமாளிகைக்கு வருவர். அப்போது பட்டர் காலக்ஷேபரஸாநுபவத்தையும் விட்டுத் தாமே எழுந்து வந்து பிக்ஷை ஸாதிப்பர். இவ்விதமாகவே ப்ரதிதினமும் ஸம்ஸ்க்ருதவேதமாத்திரமோதிய ஸ்ரீவைஷ்ணவ ரொருவரும் பிக்ஷைக்காக அங்கு வருவர். அப்போதோ வென்னில் அந்த பட்டர் பிக்ஷை ஸாதிப்பதற்கு தம் சிஷ்யரில் ஒருவரை நியமிப்பர். இங்ஙனம் நடப்பதைக் காணலுற்ற சில சிஷ்யர்கள் 'இது என்ன பக்ஷபாதம் ! ஒருவரை விசேஷமாக கௌரவிப்பதற்கும் மற்றொருவரை அகௌரவிப்பதற்கும் என்ன காரணம்' என்று ஆசார்யரைக் கேட்டனர். அதற்கு பட்டர் 'குழந்தைகாள், இங்கு நாளைக்கு வரப்போகும் அவ்விருவரையும் கவனியுங்கள்' என்று பதிலளித்து விட்டு,

மறுநாள் பழையபடியே வந்த அவ்விருவரில், முதலில் வேதாத்ய யனம் செய்தவரை உள்ளே அழைத்துச் சென்று 'தேவரீர் பரதத்வமாக யாரை நிச்சயித்திருக்கிறது' என்று கேட்டார். அதற்கு அவர் 'வேதத்தில் ஓரிடத்தில் இந்திரன் பரம் பொருளென்றும் மற்றோரிடத்தில் ருத்ரன் பரம்பொருளென்றும் இன்னுமோரிடத்தில் பிரமன் பரம் பொருளென்றும் சொல்லப் பட்டுள்ளது. ஆகையால் இதுதான் பரம் பொருளென்று அறுதியிட்டு என்னால் எதைச்சொல்ல முடியும்?' என்று விடையளித்து விட்டு பிக்ஷைபெற்றுச் சென்றார். பின்பு இப்படியே திவ்யப்ரபந்தாத்யயனம் செய்தவரையும் உள்ளே அழைத்துக்கொண்டுபோய் 'தேவரீர் யாரைப் பரம்பொருளாக அறுதியிட்டிருக்கிறது' என்று முன்புபோலவே வினவினார். அதற்கு அவர் 'இதென்ன ஆச்சரியம்! தேவரீரும் இப்படிக் கேட்டருளுகிறதே! திவ்யப்ரபந்தங்களில் 'நாரணன் முழுவேழு லகுக்கும் நாதன்' இத்யாதியாகக் கொள்ளைகொள்ளையான ஸ்ரீஸூக்திகள் ஆழ்வார்களால் அருளிச்செய்யப்பட்டுள்ளன. ஆகையால் அடியேன் ஸ்ரீமந்நாராயணனே பரம்பொரு ளென்றும், எம்பெருமானார் திருவடிகளே நமக்குத் தஞ்ச மென்றும் 'அறுதியிட்டுள்ளேன்' என்று பதிலளித்து பிக்ஷை யைப் பெற்றுப் போனார். அதன் பின்பு பட்டர் தமது சிஷ்யர் களைப் பார்த்து 'அருளிச் செயலை அத்யயனம் செய்தவருடைய அசைக்க முடியாத மனவுறுதியைக் கண்டீர்களல்லவா? ஆகை யால் ஸம்ஸ்க்ருதவேதத்தைவிட த்ராவிடவேதத்திற்கு மிக மிக மேன்மை உள்ளது. அது காரணமாக தமிழ்வேதமோதினவர்கள் திறத்தில் அதிகமான ஆதாரம் காட்டவே வேண்டும் என்று அருளிச்செய்தாரென்ற இவ்வைதிஹ்யம் அனைவரும் இசைந்த தொன்று. ஆத்தான்ஜீயர் பணித்தருளிய கடினபதபிரகை எனப்படும் அடையவளைந்தானரும்பத விளக்கத்திலும் ஓரிடத்தில் இவ்வைதிஹ்யம் விவரமாக எழுதப்பட்டுள்ளது.

இனி மற்றோர் ஐதிஹ்யமும் உண்டு. முன்பு ஒரு சமயத்தில் தேவப் பெருமாளுடைய ப்ரஹ்மோத்ஸவத்தில் இரண்டாம்நாளிரவில், தேவப்பெருமாள் ராஜவீதியில் கச்ச பேச்வராலயத்தினருகில் எழுந்தருளியிருக்கையில், ஸ்ரீவைஷ்ண வர்கள் வழக்கப்படியே திவ்யப்ரபந்தஸேவையைத் தொடங்கு

சிற ஸந்தர்ப்பத்தில், சில சைவர்கள் வந்து பலவகைப்பட்ட துர்யுக்திகளாலும் தேஹபலத்தாலும் திவ்யப்ரபந்த ஸேவையைத் தடுக்க, ஸ்ரீ வைஷ்ணவர்கள் அவர்களை யெதிர்த்துப் போர் செய்யவல்லமையில்லாமையால் அருளிச் செயல் ஸேவையில்லாமலேயே பெருமாள் திரும்பித் தன் கோயி லுக்கு எழுந்தருளினார். அப்போது ஸ்ரீ வைஷ்ணவர்கள் 'இனி என் செய்ய முடியும்? நாமோ எவ்விதத்தாலும் பகைவரை அடக்குவதற்கு ஆற்றலற்றவர்களாக இருக்கிறோம். ஆகையால் நமது கைங்கரியத்திலிருந்து நழுவிவிட்டோம் நாம்' என்று மிகவும் வருந்திக்கொண்டே தம்மையும் அறியாமல் உறங்க லாயினர். மறுநாள் பெருமாள் வழக்கப்படியே புறப்பட்டு விளக்கொளியெம்பெருமான் ஸந்நிதியினருகே ஸ்ரீமத்வேதாந்த தேசிகர் திருமாளிகையின் பக்கத்தையடைந்தபோது, பெருமாள் தாமே ஒரு பரிசாரகரை ஆவேசித்து 'இன்று ஸ்ரீமத்வேதாந்த தேசிகரை ஸ்ரீசடகோபன் புஷ்பமாலை சேஷவஸ்த்ரம் ஆகியவற்றால் கௌரவித்து ராஜவீதிக்கு அழைத்துக் கொண்டு சென்று அவர் மூலமாக ப்ரதிபக்ஷிகளை எதிர்த்துச் சண்டை யிட்ட சைவர்களை ஓட்டுங்கள்?' என்று திருவாணை யிட்டருளினார். அர்ச்சகர்பெருமக்கள் பேருளாளரின் நியமனத்தின் படியே வேதாந்ததேசிகரை கௌரவித்தனர். பின்பு பெருமாள் கச்சபேச்வரர் கோயிலருகே எழுந்தருள, ஸ்ரீவைஷ்ணவர்கள் திவ்யப்ரபந்தஸேவையைத் தொடங்கு மளவில், முதல்நாள் போல் அச்சைவர்கள் வந்து துர்யுக்தி களைச் சொல்லி திவ்யப்ரபந்த ஸேவையைத் தடுக்க, பரபூஜ்ய ரான அவ்வேதாந்தாசார்யர் மிக்க பெருந்தன்மையோடு அவர்க ளெதிரில் வந்தருளி, திவ்யப்ரபந்தத்தின் பெருமையை நிலை நாட்டத்தக்க பல பல ப்ரமாணங்களை வெளியிட்டு எதிர் வாதம் செய்த சைவர்களின் கொள்கையை மறுத்தருளினர். உடனே அவர்கள் திரும்பிச் சென்றளவில் முன்பு போலவே பெருமாளுத்ஸவம் அருளிச் செயல் ஸேவையோடு முடிவுற்றது. உடனே அந்த வேதாந்த தேசிகர் தம் திருமாளிகை சேர்ந்து 'திவ்யப்ரபந்த வைபவம்' என்னும் பெயர் பெற்றதோர் பெரிய க்ரந்தத்தை இயற்றியருளினர். இவ்வைதிஹ்யத்தை ஒட்டியே இன்றும் தேவப்பெருமாளின் மூன்றாந்திருநாளில் தூப்புல்

வேதாந்ததேசிகர் ஸ்ரீசடகோபன் புஷ்பமாலை முதலியவற்றால் விசேஷமாகத் தேவப்பெருமாளால் அநுக்ரஹிக்கப்பட்டு வருகிறார். என்று நீங்களே கூறுவதில்லையா?'

இதுவும் இன்னொரு ஐதிஹ்யம் கேண்மின் - "ந ப்ரீதிரஸ்தி மம வக்ஷஸிலாவிதாயாம் லக்ஷ்ம்யாம் ததா ஸகல பூதத்தாநஸிம்நி மஜ்ஜந்மகர்ம குண பந்த்யுதாந் ப்ரபந்தாந் ஸங்கீந்த்ய த்யநகபக்தஜநே யதைவ (என்னுடைய அவதாரம் திருவிளையாடல்கள் திருக்குணங்கள் இவற்றோடு பிணிப்புண்ட இவற்றை நன்றாக விளக்குகின்ற ப்ரபந்தங்களை நூல்களைப்பாடுமவனாகிய என்னுடைய பழிப்பற்ற பக்தனிடத்தில் எனக்கு எவ்வளவு எல்லையான அன்பு உள்ளதோ அவ்விதமான அன்பு புருஷகாரபூதையானையாலே எல்லா ப்ராணிகளின் நன்மைக்கும் எல்லையான மூலகாரணமாய் என்னுடைய மார்பில் வைத்துச் சீராட்டப்படுகின்ற மஹாலக்ஷ்மியிடத்திலும் இல்லை) என்ற ஸ்ரீ பாகவத ச்லோகத்தில் எடுக்கப்பட்ட ப்ரபந்த என்ற சொல் திவ்ய ப்ரபந்தத்தையே குறிக்கின்றதென்று ஒரு ஸமயத்தில் நம்பிள்ளை தமது சிஷ்யரான வடக்குத் திரு வீதிப்பிள்ளைக்கு அருளிச் செய்தார். பொதுவாக 'ப்ரபந்தம்' என்றால் அது ஸம்ஸ்க்ருத ப்ரபந்தங்களை - நூல்களைக் குறிக்காமல் தமிழ்த் திவ்யப்ரபந்தத்தையே குறிக்கின்றதென்பது அது கொண்டு அறியப்படுகின்றதென்று வடக்குத் திருவீதிப் பிள்ளை கேட்டதற்கு நம்பிள்ளை கூறிய விடை - ஸ்ரீரங்கநாதப் பெருமாளின் நியமனங்கொண்டு கூரத்தாழ்வான் குமாரராய் ஸ்ரீபராசரர் என்னும் பெயர் பூண்ட ஸ்ரீரங்கராஜபட்டர் அருளியதாய் இந்த ஸ்ரீபாகவதச்லோகத்தின் வ்யாக்யானரூபமாய் அமைந்ததொரு ச்லோகங்கொண்டு ப்ரபந்தசப்தம் தமிழ்த்திவ்யப்ரபந்தத்தையே குறிக்கின்றதென்னும் விஷயம் அறியப்படுகின்றது. அந்தச்லோகம் எதுவென்றால் கூறுவோம். ஸ்ரீரங்கத்தில் தநுர்மாஸத்தில் அத்யயநோத்ஸவம் நடக்கும் போது, ராஜபுரோகிதன் முதலான அத்வைதிமதத்தினர் வேதவ்யாஸாதி மஹர்ஷிகளின் புராணாதிப்ரபந்தங்கள் பல இருக்க, இவ்வாழ்வார்களின் தமிழ்ப்ரபந்தங்களை இப்போது இங்கு அத்யயனம் செய்வதற்கு மூலகாரணமென்ன' என்று ஸ்ரீபராசரப்பட்டரை ஆக்ஷேபித்தளவில், அவர் 'நப்ரீதி

ரஸ்தி' என்று பகவான் கூறிய ஸ்ரீபாகவதச்லோகத்தை உபந்ய ஸித்து அங்குள்ள ப்ரபந்தசப்தம் திவ்யப்ரபந்தத்தையே குறிக்கின்றதென்று நிச்சயித்து, "வித்யந்தே ஹி பராசராதி முநிபி: ப்ரோக்தா: ப்ரபந்தா: பரா: பக்தா ஏவ ஹி தே ததாऽபிஸகலம் த்யக்த்வாऽத்ர ரங்கேச்வர: பக்தா நேவ பராங்குசாதி புருஷாந் தத்தத் ப்ரபந்தாந் ச தாந், அத்யாத்ருத்ய ஸதோபலாலயதி யத் தத் ஜ்ஞாபநம் தத்ப்ரியே" (பராசராதி மஹர்ஷிகளால் பணிக்கப்பட்ட மிகவுயர்ந்தவையான இதிஹாஸ புராணாதி ப்ரபந்தங்கள் - நூல்கள் இருக்கின்றனவல்லவா? அம்முனிவர் பக்தர்களேயல்லவா? அங்ஙனமிருந்தும் ஸ்ரீரங்கநாதப் பெருமாள் அம்முனிவரையும் அந்நூல்களையும் அறவே விட்டு, பராங்குசாதி (நம்மாழ்வார் முதலிய) புருஷர்களையும் அவரவர்கள் அருளிய அந்தந்த திவ்யப்ரபந்தங்களையுமே எப்போதும் மிகவும் ஆதரித்து கௌரவித்துக் கொண்டாடுகிறாரென்பது அவ்வாழ்வார்களிடத்திலும் அவர்களுடைய திவ்யப்ரபந்தங்களிடத்திலும் அவர் வைத்துள்ள அன்பிற்கு அறிகுறியாகிறது என்றிந்த ச்லோகத்தை ஸ்ரீரங்கத்தில் அருளிச் செய்தார் என்பதே அந்த ஐதிஹ்யம். இந்த ச்லோகத்தில் உள்ள 'அத்யாத்ருத்ய' (மிகவும் ஆதரித்து) என்றதனால் திவ்யப்ரபந்தங்கள் திறத்தில் மிகமிக உயர்த்தி தோற்றுவிக்கப்படுகின்றது.

இனிவேறொரு புராணக்கதை

முன்பொருகால் ஏதோவொரு காரணத்தினால் அகஸ்தியமுனிவரால் மிக்க கோபத்தோடு சபிக்கப்பட்ட விச்வகர்மா பெரியதோர் சபையில் அகஸ்திய முனிவருக்கு - "அத்யப்ரப்ருதிலோகேஷு த்ராவிடீயா த்வயா க்ருதா பைசாச-துல்யா ஸா பாஷா பவிஷ்யதி ந ஸம்சய: யுஷ்மத்க்ருதவ்யாகரணம் பவிஷ்யத்யதி கர்ஹிதம் ப்ரஹ்மக்ஷத்ர விசாம்லோகே மிலேச்சபாஷாதிவத் த்ருவம் ஸந்த்யஜ் த்ராவிடதேசம்து சோரதேசோ பவிஷ்யதி அதஸ் ஸர்வேசோமர்சாபாத் அப்ரஹ்மண்யக்ருதாலய: யுஷ்மதீயோ உசிலே லோகே த்ராமிடா மந்தபுத்தய: பயாவந்த: ச ரோகா: பவிஷ்யந்தி தவப்ரியா: (இன்று முதல் நீர்செய்த தமிழ்மொழியானது உலகங்களில்

பிசாசபாஷையோடு ஸமானமாக ஆகப்போகிறது. இதில் ஐயமில்லை. நீர் செய்த தமிழிலக்கணம் உலகில் ம்லேச்ச பாஷாதிகளைப்போலே ப்ராஹ்மண க்ஷத்ரியவைச்யர்களால் மிகவும் இகழப்படப் போகிறது; இது உண்மை. தமிழ்நாடோ வென்னில் திருடர்களின் நாடாக ஆகப்போவது உறுதி. ஆகையால் அந்நாடு வேதமறியாதவர்களுக்கே இருப்பிடமாக ஆகப்போகிறது. உம்முடைய எல்லா தேசத்திலும் த்ராவிடர்கள் அற்ப புத்தியுடையவர்களாகவும் வஞ்சகர்களாகவும் கோள் சொல்லுமவர்களாகவும் கலிபுருஷனுக்கு ப்ரியமானவர் களாகவும் ஆகப்போகிறார்கள்.) என்று பலவகையாக மறு சாபம் கொடுத்தாரென்றும் இவ்விஷயம் மிகவும் ப்ரஸித்தமான தேயாகும். அதன் பிறகு பூஜ்யரான அகஸ்த்யர் மிகவும் மனங்கலங்கியவராய் தென்திசையின்கண் பதினாயிர மாண்டுகள் உணவின்றியே கடுந்தவம் புரிந்தார். அத்தவத்திற்கு மிகவுகந்த விஷ்ணுபகவான் அவரெதிரில் தோன்றி, "தபஸா தவதுஷ்டோஸ்மி ஸ்தோத்ரேணாநேந ஸத்தம நாசயாம் யாச்தே துக்கம் த்வத்ப்ருசாப ஸமுத்பவம் அஹம் த்ராவிடதேசேஸ்மிந் அவதாராந் கரோமி தாந் யேநாவ தாரேண மயா லோகே சிஷ்டபரிக்ரஹா ஸர்வத்ர த்ராவிட பாஷா பவிஷ்யதி ந ஸம்சய: சங்கசக்ராத்யாயுதாநி விஷ்வக்ஸே நாதிகாந் ஸுராந் லோகே ஸ்வதாரயிஷ்யாமி த்ராவிடே கலிசோத்பவ தாம்ப்ரபர்ணி நதீதீரே குருகா நகரே வரே மத்பக்தோ ணஹம் பவிஷ்யாமி நேதும் த்ராவிடதாம் ச்ருதிம் மயா ப்ரகாசனேஷ்ய ஸர்வை: தமிழ் த்ராவிடே பத்யரூபை: சதுஷ்டய ஸஹஸ்ராணி ப்ரபந்தாப்ய வைதமஹாத்மபி: க்ரியந்தே ணகிலவே தார்த்தா: திவ்யத்ராவிடபாஷயா தேஷு திவ்யப்ரபந்தேஷு த்ராவிடேஷு கடோத்பவ பவேத் பக்தி: பராயஸ்ய ஸ முக்தோ நாத்ர ஸம்சய: ஸஹஸ்ரகீதிஸ் தத்ராபி சடகோபேநயா ஸம்ருதா தஸ்யா: ச்ரவணமாத்ரேண ப்ரஹ்மலோகே மஹ்யதே ஸஹஸ்ரகீதிபாடநாத் ஸ்த்துஷ் டோஸ்மி நஸம்சய: அத:கலியுகே ப்ரஹ்மஸ்யா கீதி: ப்ரசரிஷ்யதி தேந ஸர்வேணாபி மநுஜா: ப்ரபந்தாத்யயநேந தே அகஸ்த்யமானாக கமிஷ்யந்தி மல்லோகம் நாத்ர ஸம்சய: சரா- சரப்ரமாம் ருடாப்யாம் முக்த்யர்த்தம் ஸர்வ தேஹிநாம்

ப்ரஸந்நே த்ராவிடே தேசே ஸர்வத்ர நிவஸாம்யஹம் ஸர்வபாஷோத்தமா பாஷா த்ராமிடீஸா பவிஷ்யதி சதுர்வேத தரோ விப்ர: ஸர்வசாஸ்த்ரவிசாரத: த்வயார்த்தைகரதோ வாணபி மந்த்ரராஜார்த்த கோவிதப் அமாநித்வா திருணக: சரமோபாயவேத்யபி திவ்யப்ரபந்தஹீந: சேத்மத் பக்தோ ந பவிஷ்யதி வேத வேதாந்த சாஸ்த்ரார்த்த ஸாரஜ்ஞோஸ்யாபி தஸ்யஹி திவ்யப்ரபந்தஹீநயாபி தஸ்யஹி திவ்யப்ரபந்த ஹீநஸ்ய வைஷ்ணவத்வம் ந ஸேதஸ்யதி ஜாதகர்மாதி ஸம்ஸ்காரை: ப்ராஹ்மண்யஞ்சாக்ரஜந்மந: யதா பவதிலோகே உஸ்மிந் யத்வேதாத்யயநேநச த்ராவிடாம்நாயபடனை: ஸம்ஸ்காரை: பஞ்சபிர் முநே ஆசார்யஸேவயா தஸ்ய வைஷ்ணவத்வம் பவிஷ்யதீ அதோ த்ராவிடவேதாந்த ரஹிதஸ்ய கதாசந நாஸ்தி நி: ச்ரேயஸம் வத்ஸஸத்யம் ஸத்யம் மயோதிதம் இத்யேவம் காரயித்வாஸ்ய ஸ்வாதஸ்நா பநம் புவி அஸ்யம் தேஸ்யப தேஷ்யாமி வ்யஸநம் நாத்ரஸம்சய: கங்கா ஸரிதா ச காவேரீ யதாஸ்ருக் மத்ப்ரஸாதத: ததைவ த்ராமிடீ பாஷா லோகே ச்ரைஷ்ட்யம் கமிஷ்யதி தே ச்ரைஷ்ட்யம் கமிஷ்யதி த்ருஷ்ட பூர்வோ ஸாமர்த்யோ ஹி புராணேஷ்வகிலேஷ்வபி தஸ்மாத கஸ்த்ய மா சோகம் குரு ப்ரஹ்மவிதாம்வர" ! ஸத்புருஷச்ரேஷ்டரே, நீர் செய்த இந்தத் தவத்தாலும் ஸ்தோத்ரத்தாலும் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். விச்வகர்மாவின் சாபத்தினால் உமக்கு உண்டான துன்பத்தைத் தொலைத்துவிடுகிறேன். நான் இந்தத் தமிழ்நாட்டில் அவதாரம் செய்யப்போகிறேன். அதனால் தமிழ்மொழி உலகெங்கும் சிஷ்டர்களால் அங்கீகரிக்கப்பட்டு விளங்கப்போகின்றது; இதில் ஸந்தேகமில்லை. என்னுடைய சங்கு சக்கரம் முதலிய ஆயுதங்களையும் சேனை முதலியார் தொடக்கமான நித்யஸூரிகளையும் தமிழ்நாட்டில் அவதரிக்கச்செய்கிறேன். தாம்ரபர்ணீ நதிக் கரையில் உள்ள உயர்ந்த குருகைநகரில், வேதத்தைத் தமிழாக வெளியிடுதற்கென்றே என் பக்தனாக நான் அவதரிக்கப் போகிறேன். நானும் என்னுடைய அம்சமாக உண்டாமவர் ளுமாக ஒரு பத்துப்பேர் த்ராவிடோத்தமர்களான மஹாத்மாக்கள் வேதார்த்தங்களனைத்தையும் திவ்யமான த்ராவிடபாஷையால் உபதேசிக்கப் போகிறார்கள்.

கூடபுலவரே. அந்த த்ராவிட திவ்யப்ரபந்தங்களில் யார் உயர்ந்த பக்தியைச் செலுத்துகிறார்களோ அவர்கள் மோக்ஷம் பெறுவது உறுதி. அவற்றுக்குள்ளும் சடகோபரால் அருளப் பட்ட வேதஸார ஸங்கதி என்னும் திருவாய்மொழியாயிரம் பாட்டுக்களையும் கேட்டமாத்திரத்திலேயே ஒருவன் பர ப்ரஹ்மமான விஷ்ணுவின் லோகத்தில் அங்குள்ள அனைவ ராலும் பூஜிக்கப்பட்டு விளங்குவான். திருவாய்மொழியை ஓது வதனால் மந்த்ரஜபமே நிகழ்கிறது. ஞானப்பட்டர். ஆகையால் அத்தனையே அந்தத் திருவாய்மொழியாயிரமும் ப்ரசாரமடைய வேண்டுகிறது. அது தன்னை அப்யஸம் செய்வதனால் எல்லா மனிதர்களும் எளிது உபாயமான வைகுண்டத்தை அடையப் போகிறார்கள். எல்லா ஆத்மாக்களும் மோக்ஷமடைவதற்காக சத்யமான தமிழ்நாட்டில் எல்லாவிடத்திலும் ஜங்கமஸ்தாவர ரூபங்களை நான் வேண்டிக்கொண்டு வசிக்கப்போகிறேன். தமிழ் மொழியானது எல்லா மொழிகளைக் காட்டிலும் உயர்ந்து விளங்கப்போகின்றது. ஒரு ப்ராஹ்மணன் நான்குவேதங்க ளையும் கண்டபாடம் செய்து அர்த்தங்களையும் எல்லா சாஸ்த்ரங்களிலும் மீமாம்ஸையும் ஸ்வதந்த்ரத்தின் பொரு ளான ப்ரபத்தி வைதிககர்மங்களிலேயே நின்றவனையும் திருமந்த்ரத்தின் அர்த்தமான அநந்யார்ஹ ஸ்வரூபத்தை ஞான பலையும் விளைக்கும் முதலிய நற்குணங்களைப் பெற்றவனையும் சரீரமானதைய ஆசார்யாபிமானத்தை நன்றாக அறிந்தவனையும் இருந்தபோதிலும் திவ்ய ப்ரபந்தங்களை ஓதாதவனாயின் அவன் என் பக்தனாக மாட்டான். வேத வேதாந்த சாஸ்த்ரங்களின் ஸாராம்சங்களை அறிந்திருந்தாலும் திவ்யப்ரபந்தாத்யயனம் செய்யாத அவனுக்கு வைஷ்ணவத்வம் சித்திக்காது. எப்படியானால் ஒரு ப்ராஹ்மண ஜாதியில் பிறந்தவனுக்கு ஜாதகர்மாதி ஸம்ஸ்காரங்களாலும் வேதாத்யயனத்தாலும் இவ்வுலகில் ப்ராஹ்மணத்வம் உண்டாகிறதோ அப்படியே ஒருவனுக்கு பஞ்சஸம்ஸ்காரங் களாலும் திவ்யப்ரபந்தாத்யயனத்தாலும். ஆசார்ய ஸேவையா- லும் வைஷ்ணவத்வம் உண்டாகிறது. ஆகையால் த்ராவிட வேதாந்தமான திவ்யப்ரபந்தங்களுக்கு குருவாய் வேண்டியவர்களாய் இருக்கின்றபடியால் இப்படியாக என்னுடைய

கொள்கையை உலகில் விரைவிலேயே ஸ்தாபித்து உனது துன்பத்தை அரிவே ஒழிக்கக் கடவேன். இதில் சிறிதும் ஸந்தேகங்கொள்ளவேண்டாம். எனது அருளாலே எங்ஙனம் காவேரி நதி கங்கையைவிடப் புனிதமாயிற்றோ அங்ஙனமே தமிழ் மொழியும் உலகில் எல்லா மொழிகளைக் காட்டிலும் உயர்த்தியை அடையப்போகிறது. நான் கூறிய இச்செய்தி யனைத்தும் எல்லாப் புராணங்களிலும் முன்பே காணப்பட்டதோயன்றோ? அகஸ்த்ய முனிவரே ப்ரஹ்மஜ்ஞாநிகளில் சிறந்தவரே! ஆகையாலே சிறிதும் வருந்தாதீர்" என்றிவ்வாறாக மிகவும் பலமான வரத்தையளித்து மறைந்து, தனது ப்ரதிஜ்ஞையை நிறைவேற்ற விரும்பி ஸோனை முதலியார் தொடக்கமான நித்யஸூரிகளை உலகில் தமிழ்தேசத்தில் பல ஜாதிகளில் அவதரிக்கச் செய்து அவர்கள்மூலமாக நாலாயிரம் பாசுரங்களையும் வெளியிட்டு, சிலநாள்கழித்து அவ்வாழ் வார்களைத் தன்னுலகம் சேர்த்துக் கொண்டான் என்பது புராணக்கதை.

இக்கதையில், விஷ்ணு அகஸ்த்ய முனிவருக்கு எப்படிப்பட்ட வரத்தை அளித்திருக்கிறாரென்பதை ஆராய்ந்தால், யாருக்கும் இது அதிவாதமென்னும் எண்ணம் தலை தூக்காது. வரங்கொடுத்த விதமானது இதைவிட ப்ரபலமாகப் புராணங்களில் காணப்படுகிறது. இங்கு விரிப்பின் பெருகுமென்றஞ்சிப் பல விஷயங்கள் சுருக்கியுரைக்கப்பட்டன வென்று கொள்ளல் வேண்டும்.

ஐந்தாம் அதிகாரம் முற்றுப் பெற்றது.

(6) ஆசார்ய ஸ்ரீஸூக்திகளை விவரித்தல்

இனி மத்யஸ்'தர்கள் நம்புவதற்காக, ஸம்ருத்யர்த்தங்களையறிந்த ஆசார்யர்களுடைய ஸ்ரீஸூக்த்திகள் ஸ்பஷ்டமாகக்காட்டப்படுகின்றன.

ஸ்ரீமந்நாதமுனிகள் 'பக்தாம்ருதம்' என்ற திருவாய்மொழித் தனியனில் 'ஸஹஸ்ரசாகோபநிஷத்ஸமாகமம் நமாம்யஹம் த்ராவிட வேதஸாகரம்' [ஸர்வ வேதசாகாஸாரமான உபநிஷத்தின் திரட்சியான- த்ராவிட வேதஸமுத்ரமான திருவாய் மொழியை நான் வணங்குகிறேன்] என்றும், அவிதிதவிஷயாந்தர: என்ற கண்ணிநுண் சிறுத்தாம்புத் தனியனில் 'சடாரேருபநிஷதாம் உபகாநமாத்ரபோக:' [சடபோபருடைய உபநிஷத்துக்களைக் கானம் செய்வதை மட்டுமே ஸுகாநுபவமாகக் கொண்டவர் ஸ்ரீமதுரகவிகள்] என்றருளிச் செய்தார்.

திருமலையனந்தாழ்வான் 'ஏய்ந்த பெருங்கீர்த்தி என்ற திருவாய்மொழித்தனியனில் 'சடகோபன் செந்தமிழ்வேதம்' [ஆழ்வாருடையதாய் மிகவும் ஸுலபமான த்ராவிடவேதம்] என்றுபணித்தருளினார்.

திருக்குருகைப் பிரான்பிள்ளான் தாமருளிய ஆறாயிரப்படிவ்யாக்யானத்தில் த்ரமிடவேதம், த்ரமிடவேதம் என்றுகோடித்தடவைகள் அருளியுள்ளார்.

எம்பார் 'பொங்குபுகழ் மங்கையர்கோனீந்த மறையாயிரம்' என்று பெரிய திருமொழித்தனியனில் அதைப் புகழ்ந்தருளினர்.

ஸ்ரீபராசரபட்டர் 'வான் திகழுஞ்சோலை' என்ற திருவாய்மொழித்தனியனில் 'தமிழ்மறைகளாயிரம்' என்றும் ஸ்ரீரங்கராஜஸ்தவ பூர்வசதகத்தில் 'ஸ்வம் ஸம்ஸ்க்ருத த்ராவிட வேதஸூக்தை: பாந்தம்' ஸம்ஸ்க்ருதவேதமென்ன த்ராவிட வேதமென்ன இவற்றின் ஸூக்தங்களாலே- நற்சொற்களால ஸ்தோத்ரங்களாலே விளங்குகிறான் ஸ்ரீரங்கநாயகன்] என்றும், ஸஹஸ்ரசாகாம்யோத்ராக்ஷீத் த்ராமிடீம்ப்ரஹ்மஸம்ஹிதாம்' [ஆயிரம் சாகைகளை கிளைகளை பாசுரங்களைக்

கொண்டதாய் திராவிடபாஷையினால் அமைந்ததாய் ப்ரஹ்மத்தையறிவிக்கும் வேதத்தொகுதியைக் கண்டார் நம்மாழ்வார்.] என்றும் அருளிச் செய்தார்.

நஞ்சீயரும் நம்பிள்ளையும் தந்தாம் அருளிய ஒன்பதினாயிரப்படி முப்பத்தாறாயிரப்படிகளில் திருவாய்மொழியை வேதமென்றும் உபநிஷத்தென்றும் விசேஷமாக அருளிச் செய்துள்ளனர்.

பின்பழகிய பெருமாள்சீயர் தாமருளிய ஆறாயிரப்படி குருபரம்பரா ப்ரபாவத்தில் 'ஸர்வேச்வரனும் அவர்களுக்கு (ஆழ்வார்களுக்கு) மயர்வற மதிநலமருளி அவர்கள் முகேந (அவர்கள் வாயிலாக) ஸர்வாதிகாரமான (எல்லோரும் ஓதத்தக்க) திராவிட வேதரூப திவ்யப்ரபந்தங்களை ப்ரகாசிப்பித்தருளினான் [வெளிப்படுத்தியருளினான்]' என்றுபணித்தருளினார். ஸ்ரீபிள்ளைலோகாசாரியருடைய ஸஹோதரரான அழகியமணவாளப் பெருமாள் நாயனார் ஆசார்யஹ்ருதயத்தில் "எவ்வுலகத்து எவ்வெவையும் என்கையாலே வேதம் பஹுவிதம், இதில் ஸம்ஸ்க்ருதம் திராவிடம் என்கிற பிரிவு ருகாதிபேதம் போலே. செந்திறத்த தமிழென்கையாலே ஆகஸ்த்தியமும் அநாதி. வடமொழிமறை என்றது தென்மொழி மறையை நினைத்திறே. வேதசதுஷ்டயாங்கோபாங்கங்கள் பதினாலும்போலேஇந்நாலுக்கும் இருந்ததமிழ் நூற்புலவர் பனுவலாறும் மற்றையெண்மர் நன்மாலைகளும். ஸகலவித்யாதிக வேதம் போலே இதுவும் திவ்யப்ரபந்தப்ரதாநம். வேதநூல் இருந்தமிழ்நூல், ஆஜ்ஞை-ஆணை, வசையில்-ஏதமில், சுருதி-செவிக்கினிய, ஓதுகின்றதுண்மை-பொய்யில்பாடல், பண்டை நிற்கும்-முந்தை அழிவில்லா என்னும் லக்ஷணங்கள் ஒக்கும். சொல்லப்பட்ட என்றவிதில் கர்த்ருத்வம்-ஸ்ம்ருதி' அத்தை ஸ்வயம்பூ படைத்தானென்றது போலே. இவரையும் ருஷிமுனி கவி என்னும், படைத்தான் கவி என்ற போதே இதுவும் யதாபூர்வகல்பநமாயே" ['ஓதுவாரோத்தெல்லாம் எவ்வுலகத்தெவ்வெவையும்' (திருவாய் 3-1-7) என்று, வேதம் ஓதுமவர்களின் வேறுபாட்டாலும் உலகங்களின் வேறுபாட்டாலும் பல வகைப்படும். இத்தகைய வேதத்தில் ஸம்ஸ்க்ருதவேதம் த்ராவிட வேதம் என்னும் பிரிவானது, ஸம்ஸ்கிருதவேதத்திலேயே ருக்வேதம் , யஜுர்வேதம் ஸாமவேதம் அதர்வணவேதம் என்னும் பிரிவு போலே

கொள்ளத்தக்கது. செந்திறத்த தமிழோசை வடசொல்லாகி' (திருநெ-4) தன் பொருளைத் தெளிவாகக் காட்டுதலையே இயல்வாகவுடைய தமிழ் மொழியையும் வடசொல்லையும் (எம்பெருமான்) வெளிப்படுத்தி என்று தமிழையும் ஸமஸ்க்ருதத்தையும் ஒருசேரச் சொல்லியும், ஸம்ஸ்க்ருதத்திற்கு முன்பே தமிழைச் சொல்லியும் இருக்கையாலேஸம்ஸ்க்ருதம் போல - அகஸ்தியர் வெளியிட்ட தமிழ்மொழியும் அநாதியாகவே உள்ளது. 'வட மொழிமறைவாணர்' (திருவாய் 8-9-8) என்று-மறையென்று பொதுப்பட அருளிச் செய்யாமல் வடமொழி என்று அடைமொழி கொடுத்து அருளிச் செய்தது, தென் மொழிமறையும் உண்டென்று நினைத்து அதிலிருந்து வாசிதோற்றுவதற்காகவன்றோ? ருக்வேதம் முதலிய நான்கு வேதங்களுக்கும்- சீக்ஷாவ்யாகரணம், ச்சந்தஸ்ஸு, நிருக்தம்; ஜ்யோதிஷம் கல்பம் என்ற அங்கங்கள் ஆறும், மீமாம்ஸா, நியாயம், புராணம், தர்ம சாஸ்திரம், ஆயுர் வேதம், தநுர் வேதம், காந்தர்வவேதம், அர்த்தசாஸ்த்ரம் என்ற உபாங்கங்கள் எட்டும் அமைந்திருப்பது போல, நம்மாழ்வார் அருளிய திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழியாகிற இந்நான்கினுக்கும் - இருந்தமிழ் நூற்புலவரான- திருவாய்மொழிப் புலவரான திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி திருக்குறுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறியதிருமடல், பெரிய திருமடல், திருநெடுந்தாண்டகம் என்னும் அங்கங்கள் ஆறும், பொய்கையாழ்வார் தொடக்கமாகவுள்ள மற்றையாழ்வார்கள் எண்மர் அருளிச்செய்த சொன் மாலைகளான உபாங்கங்கள் எட்டும் அமைந்துள்ளன. வேதங்கள் நான்கும், தமக்கு அங்கோபாங்களாகவுள்ள ஸகலவித்யைகளைவிட மேற்பட்டிருப்பது போலவே நம்மாழ்வார் திருவாக்கான இந்நான்கும் தமக்கு அங்கங்களாகவும் உபாங்கங்களாகவும் உள்ள ஸகலதிவ்ய ப்ரபந்தங்களைவிட மேம்பட்டு விளங்குகின்றன. ஸம்ஸ்க்ருத வேதத்தையும் தமிழ்வேதத்தையும் (1) வேத நூல், ச்ருதி. ஸ்ம்ருதி: மறைவாஜ்ஞரவசையில் நான்மறை, சுடர்மிகுசுருதி, வேத நூலோதுகின்றதுண்மை, பண்டைநான் மறை, நிற்கும் நான் மறை, என்றும், (2) இருந்தமிழ்நூல், ஆணையாயிரத்து ஏதமிலாயிரத்திப்பத்து, செவிக்கினிய செஞ்சொல், பொய்யில் பாடல், முந்தையாயிரத்துள்ளிவை, அழிவில்லா-

வாயிரத்திப்பத்தும் என்றும் ஸமானமாகச் சொல்லுகையாலே ஏழுவகையான லக்ஷணங்கள் இவையிரண்டுக்கும் ஸமானங்களாகும். 'சடகோபன் சொல்லப்பட்ட ஆயிரத்துள்' (திருவாய் 8-10-11) என்ற விடத்தில் திருவாய் மொழியைக் குறித்து ஆழ்வாருக்குத் தோன்றும் கர்த்ருத்வமானது (வினை முதலாகுந் தன்மையானது) அநாதிநிதநாஹ்யேஷா வாகுத்ஸ்ருஷ்டா (மனுஸ்ம்ருதி 1-21) என்று ஸ்ம்ருதியில் நித்யமான வேதத்தைக்குறித்து பிரமதேவனுக்குத் தோன்றும் கர்த்ருத்வம் போல் வெளிப்படுத்திய தன்மையேயாகும். வினை-முதலாகுந்தன்மையன்று. நான்கு வேதங்களையும் கண்டு வெளிப்படுத்தியவராய் எல்லாப் புராணங்களையுமியற்றிய வேதவ்யாஸரையும் மந்த்ரங்களைக்கண்டு வெளிப்படுத்திய சௌனகாதிகளையும்-காண்கையினாலே ருஷியென்றும், நினைத்து ஆராய்வதனாலே முனியென்றும், காலங்கடந்தவற்றையும் ஸாக்ஷாத்கரிக்கையாலே கவியென்றும் புராணங்களில் கூறியுள்ளது போலவே, அவற்றையே காரணமாகக் கொண்டு இவ்வாழ்வாரையும், ருஷிம் ஜுஷாமஹே (சடகோபராகிய ருஷியை அன்போடு வணங்குகிறோம்) சடகோபமுநிம் வந்தே' (சடகோபராகிய முனிவரை வணங்கித்துதிக்கிறேன்) என்று பட்டருடையவும் பிறருடையவும் ஸ்ரீஸூக்திகளில் ருஷி முனியென்றும், ஒன்றியொன்றியுலகம் படைத்தான் கவியாயினேற்கு' (திருவாய் 3-9-10) என்று இவர்தமது ஸ்ரீஸூக்தியில் கவி என்றும் கூறியுள்ளது. 'உலகம் படைத்தான் கவியாயினேன்' [உலகம் படைத்த எம்பெருமானைப்பேசும் கவியாக நான் ஆனேன்] என்று ஆழ்வார் தம்மைக் குறிப்பதனால், எம்பெருமான் ஸூர்யசந்திரருள்ளிட்ட உலகத்தை முன்பிருந்தபடியே சுற்பித்தாப்போலே, ஆழ்வாராகிய தாமும் திராவிடவேதத்தை முன்பிருந்தபடியே கற்பித்தமை தெரியவ-ருதலால், உலகம்போலே, திவ்யப்ரபந்தமும் யதாபூர்வகல்பநமே (முன்பிருந்தபடியே வெளிப்படுத்தினமையே) ஆகும்] இத்யாதியாகப் பல பல விஷயங்களை அருளிச் செய்து வைத்துள்ளார். ஸ்ரீசைலேசதயாபாத்ரரான மணவாளமா-முனிகள் அருளிய ஆசார்யஹ்ருதயவ்யாக்யானத்தில் இவ்விஷயங்கள் மிகவும் நன்றாக அறியத்தக்கன.

இவர் அருளிய உபதேசரத்தினமாலையில் "மாறன் மறை மாறன்மறை" என்று பலதடவைகள் காணலாகிறது.

ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா அருளிச் செய்த வரவர முனிசதகத்தில் 'சடாரித்ருஷ்டஸாமவேத மௌளி' [சடகோபர் கண்ட ஸாமவேதோபநிஷத்து] என்று பல பலவிடங்களில் தென்படுகின்றது.

ஸ்ரீமத்யதீந்த்ரப்ரவணப்ரபாவம் பிள்ளைலோகார்ய ஜீயர் அருளிய ஸ்ரீ வைஷ்ணவஸமயாசாரநிஷ்கர்ஷமென்னும் க்ரந்தத்தின்கண் இது பற்றிய விவரம் விசேஷமாகக் காணத்தக்கது.

இன்னும் அதிகமாக ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகள் உள்ளன. விரிப்பின் பெருகுமென்னும் அச்சத்தினால் அவை இங்கு எழுதப்படவில்லை. ஸ்ரீமந்நாதமுனிகளின் ஸ்ரீஸூக்தி ஒன்று மட்டுமே திவ்யப்ரபந்தம் வேதமேயென்று நிச்சயம் செய்தற்குப் போதுமானது. இவ்வாசார்யச்ரேஷ்டர் நமது ஸம்ப்ரதாயத்தில் முதல்வராகவன்றோ கருதப்பட்டிருக்கிறார்.

ஹா கஷ்டம் ! வைஷ்ணவகுலத்தில் தோன்றியவர்களுக்கு இங்ஙனேயும் ஒரு மாறுபட்ட எண்ணமுண்டாகின்றதே! கண்ணிநுண் சிறுத்தாம்பு என்று மதுரகவிகள் அருளியதோர் திவ்யப்ரபந்தத்தைப் பன்னீராயிரந் தடவைகள் அநுஸந்தித்த ஸ்ரீமந்நாத முனிகள்திறத்தில் அனுக்ரஹங் கொண்ட பெரிய பிராட்டியாரும் பரமபதநாதனும் நம்மாழ்வாரைப் பரமபதத்தினின்றும் பூலோகத்திற்கு அனுப்ப, அவர் குருகை நகரிலுள்ள உறங்காப்புளியமரத்தடியை வந்தடைந்து திவ்யப்ரபந்தங்கள் அனைத்தையும் ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு உபதேசித்தார். அந்த நாதமுனிகள் தாம் அரும் பாடுபட்டு ஸம்பாதித்த அந்த திவ்யப்ரபந்தங்களை உய்யக் கொண்டார், மணக்கால்நம்பி, ஆளவந்தார் முதலான ஆசார்யர்கள் வாயிலாக, உலகோரனைவரையும் உய்விப்பதொன்றையே கருதிய தமது உயர்ந்த திருவுள்ளத்தினால், இவ்வுலகில் வெளியிட்டருளினார். அப்படிப்பட்ட பெருமையோடு விளங்குகின்ற திவ்யப்ரபந்தங்களை, வேதபாஹ்யரைப் போன்ற இத்தகைய சிலர்-மற்ற சாதாரணமான தமிழ்ப்பாட்டுக்களோடு ஸமானமென்று நினைக்கிறார்களென்பதுதான் கஷ்டம்! இது ஒரு

பெரிய பாழ்த்த விதிபாரீர்! மநுமுதலிய பரமருஷிகளின் வசனங்களைக் காட்டிலும், ஸ்ரீவைஷ்ணவர்களான நமக்கு, ஸ்ரீமந்நாத முனிகள் தொடங்கி மணவாள மாமுனிகளீறாக விளங்கும் ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளையே ப்ரமாணங்களாகக் கொள்வது அவசியமாகிறது. ஆகையினால்தான் யதிந்த்ர மததீபிகையின் மூன்றாமவதாரத்தில் "வகுளாபரணாதிஸூரி ஸ்ரீஸூக்தய: கார்த்ஸ்யேந ப்ரமாணதரா:" [நம்மாழ்வார் தொடக்கமாக உள்ள ஆழ்வார்களுடைய ஸ்ரீஸூக்திகள் பூர்ணமாக ப்ரமாணதரங்கள் - ஸம்ஸ்க்ருத வேதாதிகளைக் காட்டிலும் உயர்ந்த ப்ரமாணங்கள்] என்று கூறப்பட்டுள்ளது. இதைவிட மிக விரிவு தேவையில்லை.

ஆறாம் அதிகாரம்

முற்றுப் பெற்றது.

(7) பிறரெழுதிய கட்டுரையை ஆராய்தல்

ஓ ப்ரபந்தபாடகர்களே! இத்தனை நேரமும் திவ்யப்ரபந்தத்தின் வேதத்வத்தையும் மற்றுமுள்ள பெருமைகளையும் நிலைநாட்டுகின்ற பல முக்கியமான ப்ரமாணங்கள் காட்டப்பட்டன. இப்போதோவெனில், 'விஜ்ஞாந சிந்தாமணி' என்னும் பத்திரிகையில் பிறர்வெளியிட்ட கட்டுரையை ஆராய்ச்சி செய்வோம்.

"ஸம்ஸ்க்ருத வேதத்திற்கும் திவ்யப்ரபந்தத்திற்கும் உள்ள தாரதம்யம்(ஏற்றத்தாழ்வு)பெரிதேயன்றோ" என்கின்றனர் பிறர்.

இது உண்மையே; ப்ரபலமான பல ப்ரமாணங்களினால் நிச்சயிக்கப்பட்ட உயர்த்தி, ஸம்ஸ்க்ருத வேதங்களுக்கு இல்லாமல் திவ்யப்ரபந்தங்களுக்கு உள்ளமையால் என்க.

இனி வேதார்த்த விசாரம்

"பகவான் பதஞ்சலியோவெனில் இத்யாதியாகப் பிறர் எழுதுகிறார்கள்.

"தேZஸு ராா:" என்று தொடங்கும் வேத வாக்கியத்தின் பொருளை இவர்கள் ஒரு சிறிதும் அறியார்களென்பதை நாற் சந்தியின் நடுவே கையை உயரத் தூக்கி உரத்த குரலில் அறிவிக்கிறோம். இப்படியல்லவா அந்த ச்ருதிக்குப் பொருள் அங்குக் கையடரால் விளக்கப்பட்டுள்ளது.

'தேZஸு ராா: ஹேலயோ ஹேலய இதிகுர்வந்த: பராபபூவு: தஸ்மாத் ப்ராஹ்மணேந நம்லேச்சிதவை நாபபாஷிதவை, ம்லேச்சோ ஹவா ஏஷ:, யத்,அபசப்த:" [அவ்வசுரர் ஹேலயோ ஹேலய: என்று சொல்லுமவர்களாய்க் கொண்டு தோல்வியுற்றனர். ஆகையால் ப்ராஹ்மணனாலே ம்லேச்சம் ப்ரயோகிக்கப்படக்கூடாது, அபபாஷை

ப்ரயோகிக்கப்படக்கூடாது; அபசப்தம் (இலக்கண விதிக்கு முரணான சொல்) என்பது யாதொன்றுண்டோ, அதுவே இந்த ம்லேச்சம்.] என்பது வேதவாக்யம். இதற்குக் கையடர் (மஹாபாஷ்யத்தின் உரையாசிரியர் ஒருவர்) எழுதிய உரைப்பகுதி

"தேஸுரா". இதி நிந்தார்த்தவாதேந 'நம்லேச்சிதவை ' இதி ம்லேச்சநம் நிஷித்யதே! தத்ர கேசித் ஆஹு: ஹை ஹே ப்ரயோகே ஹை ஹயோ : இதி ப்லுதே ப்ரக்ருதிபாவே ச கர்த்தவ்யே ததகரணம் ம்லேச்சநம் இதி! பதத்விர்வசநே கார்யே வாக்யத்விர்வசனம் லத்வஞ்ச ம்லேச்சம் இத்யபரே ! நம்லேச்சிதவை இத்யஸ்ய பர்யாய:- நாபாஷிதவை இதி! க்ருத்யார்தே தவை - ப்ரத்யய: ம்லேச்ச : இதி கர்மணி கஞ் (ப்ரத்யய:)" என்பது. இதன் விளக்கம் வருமாறு-

'தேஸுரா' என்பது வேத வாக்கியம். இதில் "தேஸுரா என்பது தொடங்கி 'ப்ராபபூவு: என்பது ஈறாக நிந்தார்த்தவாதம். அதாவது அபசப்தப்ரயோகம் பண்ணின அசுரர்கள் தோல்வியடைந்தார்களென்று கூறுவதன் வாயிலாக அபசப்தப்ரயோகத்தின் இகழ்ச்சியைப் பொருளாகக் கூறும் பகுதி. அதன் மேல் 'தஸ்மாத்' என்பது தொடங்கி 'நாபபாஷிதவை' என்பதீறாக அபசப்தப்ரயோகத்தை மறுக்கும் பகுதி. அதற்கு மேலுள்ள பகுதி- ம்லேச்சமென்பதும் அபபாஷையென்பதும் பரியாயம் (ஒரு பொருளையே சுட்டும் சொற்கள்) என்பதைத் தெரிவிக்க எழுந்தது. நிற்க. இவ்வாக்யெத்தில் முதலில், அபசப்தப்ரயோகம் தோல்வியை விளைப்பதனால் இகழத்தக்கதென்று அதன் இகழ்ச்சியைக் கூறி, பின்பு அக்காரணத்தினால் அபசப்தப்ரயோகம் (செய்யத்தகாததென்று அது) மறுக்கப்படுகிறது. இங்கு ஹேலய: ஹேலய: என்பது அபசப்தம் (இலக்கண விதிக்கு மாறானது) என்று கருதப்படுகிறது. ஏனெனில் - "ஹை ஹேப்ரயோகே ஹைஹயோ:" (ஹை என்றும் ஹே என்றுமுள்ள சொற்களைச் சொல்லும் போது அவ்விரண்டிற்கும் சந்தியில்லாமையாகிய இயல்பும் அளபெடையும் வரவேண்டும்) என்னும் விதியிருப்பதனால், ஹேஅ3 அரய:' என்று கூறியது அபசப்தமென்று சிலர் கூறினர். (ரலயோ: அபேத :- ரகரமும் லகரமும் ஒன்றேயாகையால் ரகரம் இருக்க வேண்டிய இடத்தில்

லகரம் இருப்பது தவறன்றென்பது இவர்களின் கருத்து) வேறுசிலர் - ஒரு பதத்தை இரண்டு தடவைகள் சொல்ல வேண்டியிருக்க, ஹேஉஅரய; என்று வாக்கியத்தை - இரண்டுசொற்கள் சேர்ந்த தொடரை இரண்டு தடவைகள் சொன்னதும் ரகரத்திற்கு லகரம் சொன்னதும் அபசப்தமென்று கூறினர். (ரகர லகரங்களுக்கு ஒற்றுமை என்பது குறிப்பிட்ட சிற்சிலவிடங்களில் மட்டுமேயன்றி எல்லாவிடங்களிலும் இல்லையாகையால் இங்கு லகரமிருப்பது தவறேயென்பது இவர்களின் கொள்கை.) நம்லேச்சிதவை என்பதன் பரியாயம் (மறுசொல்) நாபபாஷிதவை என்பது. க்ருத்யார்த்தத்தில் - இங்கு பாவார்த்தத்தில்-தாத்வர்த்தத்தில் தவை என்னும் விகுதி வந்துள்ளது. ம்லேச்ச: (ம்லேச்யதே இதிம்லேச்ச:) இலக்கணத்திற்கு மாறாகச் சொல்லப்படுவது ம்லேச்சம்) என்னுமிடத்தில், செயப்படு பொருட்டன்மையில் கஞ் ப்ரத்யயம் (அ என்னும் விகுதி) வந்துள்ளது.] என்னுமிதுவே கையடரின் உரைப்பகுதியின் விளக்கம்.

இந்த வேதவாக்கியத்திற்கு மஹாபாஷ்யகாரராகிய பதஞ்சலி முனிவரும் மிகவிரிவாக வ்யாக்யானம் செய்திருக்கிறார் - இதைத் தாம் மேற்கோளாகக் காட்டிய அவ்விடத்திலேயே. கையடரின் உரையிற்போலவே இவ்யாக்யானத்திலும் பிறருடைய கொள்கைக்கு அனுகூலமான விஷயம் ஏதுமில்லை. இதற்கு நேர்மாறாக ப்ரதிகூலமாகவே எல்லாம் காணப்படுகின்றன. கௌ:(=பசு) என்று சொல்ல வேண்டியிருக்கச் செய்தே காவீ கோணீ என்றிவை முதலாகச் சொல்லுவது அபசப்தம் என்றித்தகைய விஷயங்களையே பணித்தருளியுள்ளனர் பதஞ்சலிமுனிவர். நாம் என்ன செய்யக்கடவோம். இதனால் - பதஞ்சலி - கையடர்களின் வாக்யங்களைக் கொண்டு திவ்யப்ரபந்தத்தின் பெருமையை மறுக்க நினைக்கும் பிறர் வையாகரணர்கள் வாழுமிடத்தில் வாழுந் தகுதியையும் கூடப் பெற்றவர்களல்லர் என்று தனிப்படச் சொல்வது புநருக்தமாகும்.

மத்யஸ்தர்களே! இந்த ஒரு ஆச்சரியத்தைப் பாருங்கள். எதிர்வாதம் செய்யுமிவர்கள் தம்முடைய ஸம்ப்ரதாய க்ரந்தங்களைக் கூட ஆராயாமல் அவற்றுக்கு நேர்முரணான விஷயங்களையே சொல்லுகிறார்களென்பதே அவ்வாச்சரியம். அதையும் தற்போது ஆராயப்படுகின்ற திருவாய் மொழிக்கு

வ்யாக்யாநமாக, பிறர் ஸம்ப்ரதாயத்தைப் பற்றி நிற்கும் ரங்கராமாநுஜாசார்யர் பணித்த ஒன்பதினாயிரப்படியிலும், 'நம்லேச்சிதவை' என்ற ச்ருதிவாக்கியத்தை எடுத்து, அபசப்தரூபமான தமிழ் மொழியைப் பேசுவதென்பது இந்த ச்ருதியில் மறுக்கப்பட்டிருப்பதனால் தமிழ்மொழியிலுள்ள திவ்யப்ரபந்தம் கற்பதை நாம் எங்ஙனே ஆதரிக்க முடியுமென்று கேள்வியை எழுப்பி, 'நம்லேச்சிதவை' என்ற அபசப்தப்ரயோகத்தின் மறுப்பு, யாகப்ரகரணத்தில் படிக்கப்பட்டு யாகத்திற்கு அங்கமாகையாலே யாகசமயத்தில் தவிர மற்ற சமயங்களில் அபசப்தப்ரயோகம் குற்றத்தை உண்டாக்காதென்று விடையளிக்கப்பட்டது. இவ்வுரையாசிரியர்கள் இருவரும் திவ்யப்ரபந்தங்களை அபசப்தமென்று இசைந்துள்ளனர்; அவற்றை அபசப்தங்களல்லவென்று மறுக்காமையினால் 'மறுக்கப்படாதது இசையப்பட்டதாகும்' என்னும் நியாயத்தினால் என்று தோன்றுகிறது. ஆனாலும் நாம் கீழ்க்காட்டிய ப்ரமாணவசனங்களினாலே திவ்யப்ரபந்தங்களின் அபசப்தமாகுந்தன்மை மறுக்கப்பட்டிருப்பதனால் 'யாகத்தில் அபசப்தம் கூடாதே தவிர மற்ற சமயங்களில் கூடும்' என்னும் இவ்விஷயத்தில் மட்டும் அவ்விருவரின் கொள்கை ஆதரிக்கத்தக்கதேயாகும். ஆனால் 'நம்லேச்சிதவை' என்னும் ச்ருதிவாக்கியத்தைக் கொண்டு பிறரால் எந்த பூர்வபக்ஷம் கேள்வி எழுப்பப்பட்டதோ அது பூர்வபக்ஷமாக மறுக்கப்பட்ட கொள்கையாக ஆக்கப்பட்டது. இவ்விஷயத்தில் இவர்கள் ஊக்கம் செலுத்தவில்லை. இனியாவது அவ்விருவரியற்றிய உரைகளைக் கண்டு தெளிவார்களாக. மேலும் அவ்விருவரும் தத்தம் உரைகளிலேயே சிறிது தொலைவில் இந்த திவ்யப்ரபந்தத்தோடு ஒத்ததொரு நூல் வேறில்லாமையால் இதை எங்ஙனம் அநாதரிக்க முடியும் என்று உரைத்தருளினர். இதிலிருந்து ஸம்ஸ்க்ருதவேதம் சுழிக்கப்பட்டதா அன்றா என்பதைத் தாங்களே தனியாக ஆராய்ச்சி செய்யட்டும். ஐயோ முற்கூறிய வ்யாக்யானங்களிரண்டையும் அச்சிட்ட போது இவர்கள் விழித்துக் கொள்ளவில்லையே, அவ்வாக்யங்களைத்தங்கள் கருத்துக்கு இணங்கும்படி மாற்றி அச்சிடவில்லையே என்று சிறிது வருந்துகிறோம். போதும் இவ்வளவு.

"இவையனைத்தையும் மற்றோரிடத்தில் விரித்துரைப்போம்" என்கிறார்கள் பிறர். அடடா என்ன ஸ்ரீமத்காம்பீர்யம்! விரித்துரைக்க விரும்பியவற்றை இப்போதே விரித்துரைக்கலாமே.

"வெறுமனே வீட்டுக்குத் திரும்பினோம்" என்கிறார்கள். இதிலிருந்து தங்களுடைய ஆக்ஷேபத்திற்குப் பரிஹாரம் இதுவரையில் உண்டாகவில்லையென்று தோன்றுகிறது. இப்போது மிகவும் அது ஸ்பஷ்டமாக உண்டாயிற்றல்லவா ?

"மேலும் இவன் சொல்லுகிறான்" என்று தொடங்கி "நிர்ணயிக்கிறோம்" என்பதீறாகவுள்ள வாக்கியங்களுக்கு, "ஸ்ரீவேதாந்தாசார்யர் அருளிய ப்ரமாணங்களை விவரித்தல்" என்னும் இரண்டாமதிகாரத்தில் மறுப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

"புராணத்தில் வேதத்திற்கும் திவ்யப்ரபந்தத்திற்கும் ஒப்புமையன்றோ நிர்ணயிக்கப்பட்டுள்ளது" என்கிறார்கள். பாருங்கள் பண்டிதர்கள்! முதலில் "ச்ருதிக்கும் திவ்யப்ரபந்தத்திற்கும் உள்ள ஏற்றத்தாழ்வு பெரியதன்றோ" என்று எழுதிவிட்டு இப்போது வேதத்திற்கும் திவ்யப்ரபந்தத்திற்கும் ஒப்புமையன்றோ நிர்ணயிக்கப்பட்டுள்ளது" என்று எழுதுகிறார்கள். இவர்களது புலமையின் நுண்மையை என்னவென்று கொண்டாடுவது ? முன்னும், பின்னும் தாம் கூறிய கூற்றுக்களின் முரண்பாட்டை இவர்கள் சிறிதும் சிந்திப்பதில்லை.

கடைசியிலும் "பகவத்கீதையில் உபநிஷத்த்வம் போலே திவ்யப்ரபந்தத்திலும் உபநிஷத்த்வம் நம்மாலே ஏறிடப்பட்டதே யாகும்" என்று எழுதியுள்ளார்கள் இவர்கள். ஒரு புராண வசனத்தால் ஸித்தித்த ஸமத்துவத்தை ஒப்புமையைத் தாங்களே சொல்லிக் கொண்டு பின்பு ஓரிடத்திலே இப்படி ஆச்சர்யமாக எழுதினார்கள். நாமென்ன செய்வோம். நீங்கள் என்ன செய்வீர்கள். அவர்களும் என்ன செய்வார்கள். அவர்களுடைய உபாத்யாயர்கள் அவர்களுக்குக் கற்பித்தது அவ்வளவே. (இதனால் ப்ரமாணங்களுக்குக் கட்டுப்படுந்தன்மை இவர்களுக்கு இல்லவேயில்லையென்பது அறியவெளிது.)

"பாஷாகாநும்" என்று தொடங்கி எழுதுகிறார்கள். பகவானைப் பற்றியதானால் பக்தர்களுக்கு மஹாராஷ்ட்ராதி பாஷையினால் அமைந்த கானமும் தடையற்றதேயென்பது எமது உட்கருத்து. ஆகையினால் தான், "நாஹம் வஸாமி வைகுண்டயோகிநாம் ஹ்ருதயேஷு சமத்பக்தா: யத்ர காயந்தி தத்ரதிஷ்டாமி நாரத (நான் வைகுண்டத்தில் வசிப்பதில்லை, யோகிகளின் உள்ளங்களிலும் உறைவதில்லை, என் பக்தர்கள் எங்கு என்னைப் பாடுகின்றார்களோ, நாரத முனிவரே அங்கு அசையாமல் நானிருப்பேன்.) என்று பகவானால் இன்ன மொழியென்று சிறப்பியாமல், என் பக்தர்கள் என்னைப் பாடுகிற இடத்தில் நான் பேராமலிருப்பேன் என்று சோதிவாய் திறந்து அருளிச் செய்யப்பட்டது. இதனால் "ஸம்ஸ்க்ருதமொழிந்த மற்ற மொழிகளால் பேசுவது மட்டும் நீங்கள் விரும்பியபடியே தக்கதேயாயினும் காநம் (பாடுவது) என்பது நியாயத்திற்கு ஒவ்வாததாகும்" என்று சிலரது பொல்லாத சொல்லும் மறுக்கப்பட்டதாயிற்று ; ஏதேனும் ஒரு மொழியின் வாயிலாகத் தன்புகழ்களை பாடுவதொன்றேபகவானுக்குமகிழ்ச்சியை ஊட்டுவதென்று அங்கங்கு பகவானுடைய வார்த்தை காணப்படுவதனால் என்க. "ஏதத்ஸாம காயந் ஆஸ்தே" (முக்தாத்மா, "ஹாவு ஹாவு ஹாவு" என்னுமிந்த ஸாமத்தைப் பாடிக் கொண்டிருக்கிறான்) என்ற ச்ருதியும் காநத்தையல்லவோ கூறியுள்ளது. போதும் இவ்வளவு.

ஆழ்வார்களுக்கு அர்ச்சாபிம்பத்தை ஸ்தாபித்தலென்பது அபிமானத்தினால் (தாங்கள் வைத்த பற்றினால்) உண்டானதன்று. பாத்மம் பாத்மோத்தரம் முதலிய க்ரந்தங்களில் அவசியம் செய்யத்தக்கதாக விதிக்கப்பட்டுள்ளதென்பதை எப்போதும் யாரும் மறக்கலாகாது.

"அல்லது வ்யாஸபராசாரதி முனிவர்களுக்கும் அர்ச்சாபிம்பங்களை ஏற்படுத்தி அவற்றில் அவர்களைப் பூஜித்தல் அவசியமாகையால் பிம்பங்களில் அவர்களைப் பூஜியாதது அறிவிலியின் செயலேயாகும் என்கிறார்கள். நல்லது நல்லது நல்லது. முதன் முதலில் இவர்கள் அறிவிலிகள். பின்பு இவர்களுடைய ஆசார்யர்களும் ப்ராசார்யர்களும், பரமாசார்யர்களும் அத்தகையவர்கள். ஏனெனில் அவர்களும்

இவர்களும் பிம்பங்கள்வைத்து முற்கூறிய முனிவர்களைப் பூஜிக்காமையினால் என்க. ஆகையினால் பிம்பங்களில் அவர்களைப் பூஜியாதது அறிவிலிகளின் செயலன்று என்று கூறுதலே நன்றாகும். வ்யாஸாதி முனிவர்கள் முக்தியடைந்தார்களா இல்லையா என்று ஸந்தேஹமுள்ளதால் அவர்களைப் பிம்பம் வைத்து அர்ச்சிப்பதில்லை என்று கூறுதல் தவறு. "சுகமுனிவர் முக்தியடைந்தார், வாமதேவர் முக்தி பெற்றார்", முதலிய வாக்கியங்களின் வாயிலாக அவர்கள் விடுபெற்றமை நிச்சயமாக அறியப்படுவதனால் என்க. ஆக, பிம்பம் வைத்து அர்ச்சிப்பதற்கும் அப்படி அர்ச்சியாமைக்கும் காரணம் முறையே பெருமையின் மிகுதியும் அதன் குறையுமேயாகுமென்று அறுதியிடத் தக்கது. முக்தியடைந்தவர்களாக நம் நினைவுக்கு இலக்கானவர்கள் எல்லோரையும் நாம் பிம்பங்களை நிறுத்திப் பூஜிப்பதில்லை. அப்படியிருந்தால் "பாபிஷ்ட : க்ஷத்ரபந்து : ச புண்டரீக : ச புண்யக்ருத் ஆசார்யவத்தயா முக்தௌ தஸ்மாதாசார்யவாந் பவேத்" (மிகவும் பாபியான க்ஷத்ரபந்துவும் புண்ணியம் செய்த புண்டரீகரும் ஸதாசாரியர்களைப் பெற்றதனால் மோக்ஷம் பெற்றார்கள். ஆகையால் ஆசார்யஸம்பந்தத்தை அனைவரும் பெறவேணும்) என்பது கொண்டு முக்தி பெற்றவர்களாகக் கருதப்படுகிற க்ஷத்ரபந்துமுதலியவர்களையும் பிம்பமேற்படுத்தி அர்ச்சித்திருக்க மாட்டார்களா ? அவர்களை யாரும் அப்படி அர்ச்சிக்கவில்லையல்லவா ?

"பகவத் கீதையில் உபநிஷத்த்வம் ஏறிட்டது போல்" என்கிறார்கள். கீதைக்கும் உபநிஷத்த்வம் உண்மையானதே: ஏறிடப்பட்டதன்று என்பது வைதிக பக்ஷபாதிகளின் கருத்து. யுக்தியையும் காண்மின். "பாரத : பஞ்சமோ வேத:" (மகா பாரதம் ஐந்தாவது வேதம்) என்றிது முதலான ப்ரமாணங்களால் நிச்சயிக்கப்பட்ட வேதத்வத்தையுடைய மஹா பாரதத்தைச் சேர்ந்தமையால், பகவத் கீதையில் உபநிஷத்த்வம் ஏறிடப்பட்டதென்று எப்படிச் சொல்ல முடியும்? வராஹபுராணம் முதலிய நூல்கள் கீதையின் பெருமை விசேஷமாக வருணிக்கப்பட்டுள்ளது. அங்கே காண்க. கீதையிலும் நான்காமத்யாயத்தில் "இமம் விவஸ்தே யோகம்" என்றிது முதலான ச்லோகங்களினால் இதன் உபநிஷத்த்வம் அறியவெளிது. விவரம் மற்றொரு சமயம் செய்யப்படும்.

"திவ்யப்ரபந்தங்களில் மட்டும் உபநிஷத்த்வம் ஏறிடப்பட்டதென்று நாம் சொல்லுகிறோம்" என்று அவசரப்பட்டுத் தீச்சொல்லைச் சொல்ல வேண்டாம்; "இஷேத் வோர் ஜேத்வா" என்றிது முதலான வாக்கியங்களின் திரளிலும் உபநிஷத்த்வம் ஏறிடப்பட்டதென்று சொல்லுதல் பொருந்துமாகையால். இங்ஙனமே எதிலும் உண்மையான உபநிஷத்த்வம் ஸித்திக்க மாட்டாது. ஸம்ஸ்க்ருதவேதமென்று வழங்கப்படுகிற ஒரு க்ரந்தமானதோவென்னில் "நான் வேதம்" என்று எவ்விடத்திலாவது சொல்லிக் கொண்டதா என்ன? (பகவானும் மஹரிஷிகளும் ஆசார்யர்களுமான பிறர்தான் அதுதன்னை வேதமென்கிறார்கள். அவர்கள் தான் திவ்யப்ரபந்தத்தையும் வேதமென்றும், வேதத்தைவிட உயர்ந்ததென்றும் கூறினார்களென்பதை முன்னதிகாரங்களில் நிருபித்தோம்.) ஆகையால் இதென்ன அதிவாதம்! இது ஒருபோதும் காசுக்கும் உதவாது. போதும் நிறுத்துங்கள் உங்களதிவாதத்தை.

"உண்மையில் நாமே ஸத்யவாதிகள்" என்கிறார்கள். ஒரு சுபகாரியத்துக்கும் உதவாத அமங்களவாரத்துக்கு (செவ்வாய்க் கிழமைக்கு) மங்களவாரமென்னும் பெயர் எவ்வளவு ஸத்யமானதோ, அஸத்யமே பேசுமிவர்களுக்கும் ஸத்யவாதிகள் என்னும் பெயரும் அவ்வளவு ஸத்யமானது.

ஸ்ரீவேதாந்தாசார்யர் அருளியப்ரமாணங்களாலும், ப்ரஸித்தங்களான பல புராண வசனங்களென்னும் ப்ரமாணங்களாலும் நம்மாழ்வார் தாமே சோதிவாய் திறந்து அருளிச் செய்தஸூக்திகளாலும், கௌரவிக்கத்தக்க எண்ணிறந்த ஐதிஹ்யங்களாலும் மற்றுள்ள ஆசார்யர்களருளிய ஸூக்திகளாலும், திவ்யப்ரபந்தங்களில் வேதத்வமும் இன்னும் சில உயர்த்திகளும் ஸ்பஷ்டமாக கூறப்பட்டன. பண்டிதர்களும் த்ருப்தி செய்விக்கப் பட்டார்கள்.

ஏழாம் அதிகாரம்

முற்றுப் பெற்றது.

(8) இது காறும் இந்த நூலின் கண் கூறிய பொருள்களைச் சுருங்கக் கூறுதல்

வாசகர் பெருமக்களே, இது வரையில் கூறிய விஷயங்களை அனைவருக்கும் ஸாரமாக அறியும் பொருட்டு இங்குச் சுருக்கிக் கூறுவோம்.

ஐயா, த்ராவிடப்ரபந்தத்திற்கு வேதத்வம் எப்படிப் பொருந்தும் ? என்று கேட்க வேண்டா. த்ராவிட வேதம் இல்லையென்று சொல்லும் நீ த்ராவிடப்ரபந்தமென்று ஒன்றுண்டென்று இசைந்தாயா இல்லையா ? இல்லையெனில் ஆச்ரயாஸித்தி - இடமில்லாமை என்னும் தோஷமுண்டாகும். த்ராவிடப்ரபந்தமே உன்னாலிசையப்படாதபோது, வேதத்வம் இல்லையென்பதை எதில் சாதிப்பாய். த்ராவிடப்ரபந்தம் உண்டு என்று இசைந்தாயாகில் , அதனை உண்டென்று அறிவிக்கிற ப்ரமாணங்களாலேயே அதன் வேதத்வமும் அறிவிக்கப்படுதலால் பாதமென்னும் குற்றமேற்படும். அந்த ப்ரமாணங்களால், திவ்யப்ரந்தத்திற்கு நீ கூறும் வேதத்வமில்லாமையென்பது பாதிக்கப் (தடுக்கப்) படுதலால்.

அந்த ப்ரமாணங்கள் திவ்யப்ரபந்தம் உண்டென்பதையும் அதன் வேதத்வத்தையும் அறிவிக்கின்றன என்கிறீர்கள். அவற்றால் திவ்யப்ரபந்த முண்டென்பதை மட்டும் இசைகிறேன். அதன் வேதத்வத்தை இசைய மாட்டேன் என்பாயாகில் அப்படி நீ சொல்வது திவ்யப்ரபந்தத்திற்கு ப்ராமாண்யமே - உண்மையை அறிவிக்குந்தன்மையே இல்லையென்று கூறியதாக முடியும்.

அப்படியானால் வேதமேப்ராமாணம்மற்றது அப்ரமாணம் என்பது என் கொள்கையாதலால், அதற்குச் சேர திவ்யப்ரபந்தத்துக்கு அவேதத்வம் - வேதமல்லாமை ஸித்திக்கிறது - என்று நீ சொல்ல முடியாது. "ஔத்பத்திகஸ்து சப்தே ந அர்த்தஸ்ய ஸம்பந்த:" (சொல்லோடு பொருளுக்கு உள்ள தொடர்பு வாச்ய வாசக பாவம். அதாவது சொல்லால் அறிவிக்கப்படுவது பொருள், பொருளை அறிவிப்பது சொல் என்று கூறப்படும் ஸம்பந்தம் இயற்கையாக உள்ளது.) என்று ஜைமினிமஹர்ஷியாலே கூறப்பட்ட படியே சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள ஸம்பந்தம் இயற்கையாக-

வுள்ளதொன்றாகையாலே, பொருளை உள்ள படியே அறிவிக்கும் தன்மையாகிய ப்ராமாண்யம் திவ்யப்ரபந்தமென்னும் சொற்றொடரில் தானே இயற்கையாகவே ஸித்திப்பதனால் என்க.

சொல்லுக்கு ப்ராமாண்யம் இயற்கையாகவே உள்ளதொன்றாயினும் திவ்யப்ரபந்தமாகிய தமிழ்ச் சொல்லென்பது பௌருஷேயம் (ஆழ்வாராகிய மனிதரால் உண்டாக்கப்பட்டது) ஆகையாலே மனிதனிடம் இயற்கையாக ஏற்படும் அறிவின்மை திரிபுணர்ச்சி வஞ்சகத் தன்மை முதலியவை காரணமாக உண்டான தமிழ்ச் சொற்களுக்கு பொருளை உள்ளபடியே அறிவிக்குந் தன்மையாகிய ப்ராமாண்யமில்லாமையால் அப்ராமாண்யம் உண்டாகியே தீரும் - என்று சொல்லுதல் கூடாது- "தாம்ரபர்ணீ! நதீ யத்ர" என்று தொடங்கி தாம்ரபர்ணி முதலிய நதிகள் எந்த குருகை முதலான நகருள்ளவிடங்களில் பாய்கின்றனவோ, அவ்விடங்களில் வாஸம் செய்து கொண்டு அவற்றின் நீரைப் பருகுமவர்களுக்கு ஸ்ரீமந்நாராயணனிடத்தில் தடையில்லாத அதிக பக்தி ஏற்படும் என்று ஸ்ரீபாகவதத்தில் *(11.5.29,30)* சொல்லப்பட்ட குருகையென்னும் திவ்யதேசத்தில் அவதரித்தவரும், மிகமிக உயர்ந்த பகவத்கடாக்ஷத்தால் பெற்ற ஞானத்தையுடையவரும் பொய்யில் பாடல்களைப் பாடுமவராகையாலே மிகமிக ப்ராமாணிகளும் நம்பத்தக்கவரும் வியாஸர் முதலிய மஹரிஷிகளைக் காட்டிலும் அதிகமான மகிமையினால் விளங்குமவருமான இந்த நம்மாழ்வாரிடத்தில் அறிவின்மை முதலிய குற்றங்கள் இருக்குமென்ற சங்கைக்கும் ஸந்தேஹத்திற்கும் இடமில்லாமையால் என்க.

மேலும் திவ்யப்ரபந்தம் பௌருஷேயமென்பது ஸித்தித்தாலன்றோ அதற்கு ப்ராமாண்யமில்லையென்னும் ஆக்ஷேபத்திற்கு இடமுள்ளது. நம்மாழ்வார் முதலிய ஆழ்வார்களுக்கு திவ்யப்ரபந்தங்களை வெளிப்படுத்துவதில் மட்டுமே உரிமையாகையால் அவற்றிற்குப் பௌருஷேயத்வமில்லையென்றுணர்ந்து இனிப்பேசாதே இரு.

பெருமைமிக்கவர்களென்று மிகவுயர்ந்த ப்ரமாணங்களாலே அறியப்பட்ட ஆழ்வார்கள் விஷயத்தில் நீ மாறுபட்ட கருத்தையுடையவனாயிருந்தால் மந்த்ர

க்ருத்துக்களான வஸிஷ்டர் முதலான முனிவர்கள் திறத்தில் மாறுபட்ட கருத்தை கொண்டவர்கள் "ருஷிகளுக்கும் ப்ராமணர்களுக்கும், கௌரவத்தை உண்டாக்குவதற்காக ருஷிகளாலும் ப்ராமணர்களாலும் (ஸம்ஸ்க்ருத) வேதம் கற்பிக்கப்பட்டது." என்று கூறுகிறார்களல்லவா? அப்பாமரர்கள் மட்டும் என்ன தவறு செய்தார்கள்.?

திவ்யப்ரபந்தம் புருஷனால் செய்யப்பட்டதென்று கொண்டாலும் புருஷனிடமிருந்து உண்டானமை என்பதாவது அதன் கண் உள்ளதனால் அதுவே அதற்குக் குறையுண்டாக்குமே என்று சொல்லாதே: "அநாதிநிதநா ஹ்யேஷாவாக் உத்ஸ்ருஷ்டா ஸ்வயம்புவா" (உத்பத்திவிநாசங்களில்லாத இந்த வேதவாக்கானது ப்ரஹ்மாவினால் உண்டாக்கப் பட்டதல்லவா? என்றிது முதலியவற்றால், ஸம்ஸ்க்ருத வேதத்துக்கு நித்யத்வமிருந்த போதிலும் ப்ரஹ்மாவாகிய புருஷனிடமிருந்து உண்டானமையென்பது அதன் நித்தியத்துவத்துக்கு முரணானதன்று என்று இசையுமுனக்கு இத்தகைய கேள்வி கேட்பதே தகுதியன்றாகையால் என்க.

"உயர்வற என்ற பாட்டில், உகரத்திற்குப் பின்பு ய், அதன் பின்பு அ, அதன் பின்பு ர், அதன் பின்பு வ், அதன் பின்பு அ, அதன் பின்பு ற், அதன் பின்பு அ என்றித்தகைய எழுத்துக்களின் தொடர்ச்சியோ அல்லது எழுத்துக்களோ நித்யமல்லாமையால் அப்படிப்பட்ட திவ்யப்ரபந்தத்துக்கு வேதத்வம் இல்லையென்று சொல்லுதல் தகாது. ப்ரளய காலத்தில் சொல்லுவாரில்லாமையாலே முற்கூறிய தொடர்ச்சியோ எழுத்துக்களோ இல்லாதிருந்த போதிலும் அப்போது பகவானொருவன் உள்ளானாகையாலே அவனுடைய ஜ்ஞானத்தில் எழுத்துக்களும் முற்கூறிய அவற்றின் தொடர்ச்சியும் நித்யமாக உள்ளபடியால் திவ்யப்ரபந்தத்திற்கு நித்யத்வமும் வேதத்வமும் பொருந்துமாகையால் - என்க

திவ்யப்ரபந்தம் பாஷை (மொழி) யுருவாக அமைந்தமையால் அதற்கு ப்ராமாண்யமும் வேதத்வமும் இல்லையெனல் வேண்டா; ஸம்ஸ்க்ருத வேதமும் ஒரு பாஷையுருவாகவே அமைந்துள்ளமையால் அது தனக்கும் - நீ இசைந்த ப்ராமாண்யமும் வேதத்வமும் இல்லாமற்போய்விடும் ஆகையால்.

ஸம்ஸ்க்ருத பாஷையொழிந்த மற்ற பாஷை சாஸ்த்ரவிதிக்குப் புறம்பானதாகையாலே அதற்கு வேதத்வம் கூடாதென்பது தவறு. ஸ்ம்ஸ்க்ருத வேதத்தை சேர்ந்த "ஹாலாஹல" என்றிது முதலான அஸுரபாஷைக்கு - சாஸ்த்ர விதிக்குப் புறம்பானமை காரணமாக அவேதத்வம் - வேதமல்லாமை ஏற்பட்டுவிடுமாகையால், அது வேதமாகவன்றோ இசையப்பட்டுள்ளது.

ஐயா, த்ராவிட பாஷை ம்லேச்ச பாஷையாகையால் அதற்கு வேதத்வம் எப்படிப் பொருந்தும் என்றால் உன் குடுமி என் கையில் அகப்பட்டுவிட்டது. "யதைவ ஸாம்ஸ்க்ருதீ பாஷா ப்ரயுக்தா ஸ்வர்க்க தாயிநீ ப்ராக்ருத்ராமிடீ சாபி ததைவ ஸ்வர்க்கதாயிகே அதோ Zந்யா: கலுயா பாஷா: ஆந்த்ர கர்ணாடதேசஜா: அநார்ஷத்வாத் அபப்ரம்சா இதி சாஸ்த்ரவிதாம் மதம் தஸ்மாத் பாஷாந்தரீயாணாம் காவ்யா நாம் தோஷகீர்த்தனம் ப்ராக்ருதாத் த்ராமிடாச்சாபி விபிந்ந விஷயம் பவேத் ச்ருதௌது நம்லேச்திதவை இத்யேததபி யத் வச: தத் அநார்ஷ வசாஸ்யேவ நிஷேதேத் நாZஷ மப்ய ஹோ. (எங்ஙனம் ஸம்ஸ்க்ருத பாஷை தன்னைப் பேசினவனுக்கு ஸ்வர்க்கம் அல்லது மோக்ஷத்தைத் தரவல்லதோ, அங்ஙனமே ப்ராக்ருத பாஷையும் தமிழ் மொழியும் தம்மை உச்சரித்தவனுக்கு அவற்றைத் தரவல்லன. ஆதலால் இவை தவிர மற்றுள்ள தெலுங்கு கன்னட தேசங்களிலுண்டான பாஷைகளே ருஷிஸம்பந்தமில்லாமையால் அபப்ரம்சங்கள் சிதைந்து கெட்டுப்போன பாஷைகள் என்று கூறும் குற்றமுடையனவென்பது சாஸ்த்ரமறிந்தவர் இசைந்ததொன்றாகும். ஆகையால் ஸம்ஸ்க்ருதமொழிந்த மற்ற பாஷைகளிலுள்ள காவியங்களைப் பொதுவாகக் குற்றங்கூறுவது ப்ராக்ருத மொழியும் தமிழ் மொழியுமல்லாத பிறமொழிகளாலான காவியங்களையே சேரும். வேதத்தில் "ந ம்லேச்திதவை" (அபப்ரம்ச பாஷை பேசத்தக்கதல்ல) என்றுள்ள வாக்கியம் ருஷிஸம்பந்தமில்லாத பாஷைகளையே தடுக்குமன்றி ருஷிஸம்பந்தம் பெற்ற தமிழ்மொழியைத் தடுக்கமாட்டாது இதுதான் ஆச்சர்யம்) என்று மூன்றாம் அதிகாரத்தில் எடுத்தாளப்பட்ட ஸ்கந்த புராண வசனங்கள் உன்காதில் விழவில்லையா என்ன?

ஐயா, தமிழ் முதலிய எல்லா மொழிகளும் ஸம்ஸ்க்ருத பாஷையிலிருந்தே உண்டானவையென்று பிரசித்தி பெற்றுள்ளதனால் ஸம்ஸ்க்ருத பாஷை மயமான வேதத்தைக் காட்டிலும் தமிழ் மொழி மயமான திவ்யப்ரபந்தத்துக்கு உயர்த்தியும் வேதத்வமும் எப்படி என்றால் இதற்கு நீயே விடையிறுக்க வேண்டும். முன்பு பார்வதிக்கும் சங்கரனுக்கும் ஏன் உத்ஸவம் நடந்தது ? அகஸ்த்திய முனிவர் ஏன் அங்கே சென்றார் ? விச்வகர்மா அம்முனிவரை வேறிடத்திற்கு செல்லும் படி ஏன் வேண்டினான் ? அதனால் அகஸ்த்யர் அவனை ஏன் கோபித்துக் கொண்டார் ? அதற்கு விச்வகர்மா தமிழ் மொழியை! ஏன் நிந்தனை செய்தார் ? அகஸ்திய முனிவர் விஷ்ணுவைக் குறித்து ஏன் தவமியற்றினார் ? அதற்கு மகிழ்ந்த அவ் விஷ்ணு பகவான் அந்த தமிழ் மொழி எல்லா மொழிகளைக் காட்டிலும் உயர்ந்ததாகப் போகிறது என்று ஏன் வரமளித்தார்? இக் கேள்விகளையெல்லாம் அவர்களையே நோக்கிக் கேள். எனக்கென்ன தெரியும்?

ஐயா, ப்ரஹ்மயஜ்ஞாதானத்தில் திவ்யப்ரபந்தங்களைப் பூஜ்யமாக பூஜிக்கத்தக்கதாகச் சொல்லாததனால் அவற்றிற்கு வேதத்வமில்லை. வேதத்வமிருந்தால் பூஜிக்கத்தக்கதாக அதில் சொல்லப்பட்டிருக்குமல்லவா என்றால் அப்படிச் சொல்லாதே. தைத்திரீயாருணசாகையில் இரண்டாம் ப்ரச்னத்தில் "அஜாந் ஹ வை" என்று தொடங்கி "யத்ருசோ உத்யகீஷத தா: பய ஆஹுதயோ. தேவாநாமபவந் , யத்யஜும்ஷி -க்ருதா 'ஹுதயோ யத்ஸாமாநி ஸோமா ஹுதயோ யத் அதர்வாங்கிரஸோ மத்வாஹுதயோ யத் ப்ராஹ்மணாநி இதிஹாஸாந் புராணாநி கல்பாந் காதா: நாராசம்ஸீர் மேதாஹுதயோ தேவாநாமபவந், தாபி: க்ஷுதம் பாப்மா நமபாச்நந் அபஹதபாப்மாநோ தேவா; ஸ்வர்க்கம் லோகமாயந் ப்ரஹ்மணஸ் ஸாயுஜ்யம் ருஷயோ Zகச்சந் (ருக்வேத மந்திரங்களைருஷிகள் அத்யயனம் செய்தார்களென்பது யாதொன்று உண்டோ அது தேவர்களுக்குப் பாலாஹுதிகளாக ஆயிற்று. (பாலால் செய்த ஆஹுதிகள் போல் மகிழ்ச்சியைத் தந்ததென்றபடி. இங்ஙனமே மேலும் காண்க.) யஜுர் வேத மந்திரங்களை ருஷிகள் அத்யயனம் செய்தது தேவர்களுக்கு நெய்யாஹுதிகளாக ஆயிற்று. ஸாம வேத மந்திரங்களை ருஷிகள் அத்யயனம் செய்தது தேவர்களுக்கு ஸோம

தூராஸாலாஹூதிகளாக ஆயிற்று. அதர்வாங்கிரஸ்ஸுக்களை அதர்வ வேத மந்திரங்களை ருஷிகள் அத்யயனம் செய்தது தேவர்களுக்கு தேனாஹூதிகளாக ஆயிற்று ப்ராஹ்மணங்கள், இதிஹாஸங்கள், புராணங்கள் கல்பங்கள் நாராசம்ஸிகளான காதைகள் (மனுஷ்யர்களான ஆழ்வார்கள் அருளிய பாசுரங்கள்) இவற்றை ருஷிகள் அத்யயனம் செய்தது தேவர்களுக்கு மாம்ஸாஹூதிகளாக ஆயிற்று. அந்த மாம்ஸாஸூதிகளாலே தேவர்கள் பசியாகிய பாபத்தை ஒழித்தார்கள். பாபம் தீர்ந்த தேவர்கள் (சுகமனுபவிக்க) ஸ்வர்க்கம் சென்றனர். அத்யயனம் செய்த ருஷிகள் ப்ரஹ்மஜ்ஞானத்தைப்பெற்று ப்ரஹ்மஸாயுஜ்யத்தை அடைந்தார்கள் என்பதீறாகவுள்ள வாக்கியங்களாலே திவ்யப்ரபந்தப் பாட்டுக்களும் ப்ரஹ்மயஜ்ஞத்தில் அடங்கியுள்ளமை காண்க. (சிறிது தூரத்தில்) காதைகளின் அத்யயனத்தோடு கூடிய ப்ரஹ்மயஜ்ஞத்துக்கு ஆயுஸ்ஸு, ஒளி பலம், செல்வம், புகழ், ப்ரஹ்மதேஜஸ்ஸு, அந்நம் முதலிய பயன்களை விளக்குந்தன்மை விளக்கப்பட்டது. (அதற்கு மேல் சிறிது தூரத்தில்) "நாராசம்ஸ்யா Zபிஷிஞ்சதி "மநுஷ்யா வை நாராசம்ஸா:" (நாராசம்ஸி காதையால் நீராட்டுகிறான். மனுஷ்யர்களே நாராசம்ஸர்கள்) என்றும் உள்ளது. ஆக ப்ரஹ்மயஜ்ஞத்தில் திவ்யப்ரபந்த காதைகளுக்கும் பூஜ்யத்வம் சொல்லப்பட்டதனாலே அதற்கு வேதத்வம் உண்டென்பது ஸித்திப்பதனால் என்க.

ஐயா, அங்கு காதைகளென்றால் - புராணங்களில் ப்ரஹ்ம - பித்ரு காதைகள் - ஸம்ஸ்க்ருதச்லோகங்கள் அங்கங்குச் சொல்லப்பட்டுள்ளன. அவையே கொள்ளப்பட வேண்டும் என்றாயாகில் இப்போது வெளிப்பட்டு விட்டது உன்னுடைய சாமர்த்தியம். என்னெனில் "புராணாதி" என்பதனாலே அவற்றிலுள்ள ப்ரஹ்ம பித்ருகாதைகளும் சொல்லப்பட்டு விட்டதனால் - காதா என்பதனாலும் அவற்றையே கொள்ளுமளவில் பௌநருக்த்யம் கூறியது கூறல் என்னும் குற்றமாகுமே, என்பதையும் அறியாமல், எங்களுக்கு இஷ்டமில்லாததொன்றை, (திவ்யப்ரபந்தப் பாட்டுக்கள் காதாசப்தத்திற்குப் பொருளல்ல ஸம்ஸ்க்ருத புராணங்களிலுள்ள ஸம்ஸ்க்ருத பாஷாமயமான ப்ரஹ்மபித்ரு காதைகளே என்பதை) ப்ரஸங்கம் செய்கிறாயாகையால் - என்க.

மேலும் "ஸஹஸ்ரபரமாதே வீ சதமூலா சதாங்குரா ஸர்வம் ஹரது மே பாபம் தூர்வா துஸ்ஸ்வப்நநாசிநீ" (தைத் நாரா - 29) என்கிற விடத்தில்,"ஸஹஸ்ரபரமா தேவி திருவாய்மொழி ஆயிரம் பாட்டு வடிவமாய் மிகவும் உயர்ந்த, = அந்த தமிழ்பாட்டுக்களுக்கு அபிமாநிநியான தேவதையானது, சதமூலா = திருவிருத்தமாகிய நூறு பாட்டுக்களை மூலமாகக் கொண்டதாயும், சதாங்குரா = இராமாநுச நூற்றந்தாதியாகிய நூறு பாட்டுக்களை அங்குரமாக முளையாகக் கொண்டதாயும் தூர்வா = (த்ரவி - தாரணே என்பது தாது ஆகையால்) எல்லா ஸம்ஸார பந்தத்தையும் பிளந்தெறிவதாகவும், துஸ்ஸ்வப்நநாசிநீ (தூர்வா சப்தத்தின் விவரணமே இது) சாதாரண ஸ்வப்நத்தை விடப்ரபல = அதாவது மிகவும் துக்கமனுபவிப்பதற்குக் காரணமான ஸம்ஸாரத்தை நசிக்கச் செய்வதாயும் இருந்து கொண்டு மான துஸ்ஸ் மே = என்னுடைய ஸர்வம் பாபம், = எல்லாப் பாபங்களையும் , ஹரது = போக்கடிக்கட்டும் என்று எம்பார் ஜீயர் ஸ்வாமி வ்யாக்யானம் செய்தருளியது காணத்தக்கது.

ஐயா, இந்தச் ச்ருதி அருகம் புல்லைப் பற்றியது என்கிற உண்மையை மீறி திருவாய் மொழியாகிய காதையைப் பற்றியதென்று வ்யாக்யானம் செய்வது பெருங்குற்றமாயிற்றே என்பாயாகில் ச்ருதியின் கருத்தை அறிவதில் உனக்குள்ள பெருமை அத்யாச்சரியம்! அற்பமானதோர் அருகம்புல்லில் சதமூலத்வம் சதாங்குரத்வம் துஸ்ஸ்வப்நநாசகத்வம் முதலிய புலன்களுக்கு எட்டாத பல பெருமைகளை இந்த ச்ருதி அறிவிப்பதாக இசைகிறாயே. பகவத்ஸ்வரூபம் திருமேனி குணங்கள் விபவங்கள் (நித்யவிபூதி லீலா விபூதிகள்) மற்றுமுண்டான செல்வங்கள் இவற்றை நன்றாகத் தெரிவிக்கிற தமிழ் பாட்டுருவமான தேவதையைத்தான் மற்றுள்ள உயர்த்திகளையும் உனக்கு இஷ்டமில்லாவிடினும் நீ இசைந்தே தீர வேண்டுமென்பது உறுதியாக்கப்பட்டதாகையால் எதிலும் எக் குறையும் இல்லை

எட்டாம் அதிகாரம் முற்றுப் பெற்றது.

(9) முடிவுரை

முடிவில் ஆஸ்திகர்களின் ஸந்நிதியில் கைகூப்பி இது தன்னை விண்ணப்பிக்கிறேன். திவ்யப்ரபந்தத்தின் பெருமையைப் பற்றி அவசியமாகச் சொல்ல விரும்பிய எல்லாம் பெரும்பாலும் இந்நூலில் சொல்லப்பட்டனவென்று நினைக்கிறேன். வாக்குக்கு எட்டாததன்றோ திவ்யப்ரபந்தத்தின் மஹிமை. ஸ்ரீ வேதாந்தாசார்யரோவெனில் தாமெழுதியருளிய சில கிரந்தங்களில் விரிவாகவும் சுருக்கமாகவும் இதன் மகிமையை வெளியிட்டுயிருக்கிறார். புராணங்களிலும் ஸம்ஹிதைகளிலும் மற்றுமுள்ள நூல்களிலும் இதன் உயர்த்தியைத் தெரிவிக்கின்ற ப்ரமாணங்கள் பரார்த்தத்துக்கும் அதிகமாகவுள்ளன. (பரார்த்தம் - நூலக்ஷ கோடிகள்) அவை கிடைக்க புராணாதிவசனங்களில் ஸ்ரீமந்நாத முனிகள் தொடக்கமான ஆசார்யச்ரேஷ்டர்களின் ஸ்ரீஸூக்திகளைவிட உயர்த்தியை நாம் சிறிதும் இசைகிறோமல்லோம். அதற்குக் காரணம் நாம் ஸ்ரீவைஷ்ணவ குலத்தில் தோன்றினமையேயாகும் இந்த திவ்யப்ரபந்தத்திற்காக, பரம்பூஜ்யரான அந்நாதமுனிகள் எவ்வளவோ பரிச்ரமப்பட்டிருக்கிறார். அப்படியிருக்க அடடா! எப்படிப்பட்ட ஆக்ஷேபம். அது தன்னைப் பத்திரிகையில் வேறு வெளிப்படுத்துவது. இவையத்தனையும் அழகிலும் அழகன்றோ? சார்வாகர்கள் ப்ரத்யக்ஷப்ரமாணத்தையாவது ஒப்புக்கொள்ளுகிறார்கள். இவர்களோ அதையும் இசையார்களென்பது மிகவும் கஷ்டம். நாஸ்திகவாதம் செய்வதில் இது என்ன எங்குங்காணாத விடாப்பிடி? ஆச்சர்யம்! தினந்தோறும் "மாறன்மறையும் இராமாநுசன் பாஷ்யமும் தேறும் படியுரைக்கும் சீர்" என்றும் "மாநகரில் மாறன் மறை வாழ!! என்றும் இத்யாதிகளை அநுஸந்தித்து கொண்டிருந்தும் இவர்கள் விழித்துக் கொள்கிறார்களில்லை ஐயோ கஷ்டம். அநாதி மாயையாலன்றோ உறங்குகிறார்கள். பல சொல்லிப் பயனென்? ஸம்ஸ்க்ருத வேதத்தில் தர்மார்த்த காமங்களாகிற ஸ்வல்ப பலன்களைக் கூறுவதில் ஊன்றின பூர்வபாகத்தைக் காட்டிலும் மோக்ஷமென்னும் உயர்ந்த பலனைத் தெரிவிக்க வல்ல உபநிஷத்தென்னும் உத்தர பாகத்திற்கு உயர்த்தியானது வைதிகர்களாலே எங்ஙனம் இசையப்பட்டுள்ளதோ அங்ஙனமே "த்ரைகுண்யவிஷயா:

வேதா: " கீதை 2-45.. [ஸத்வம் ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்கள் நிறைந்த மனிதர்களை இலக்காகக் கொண்டன வேதங்கள்] என்கிறபடியே முக்குணமுடையதும் பரம்பொருளின்னதென்று ச்ரமப்பட்டு அறிய வேண்டியிருப்பதுமான ஸமஸ்க்ருத வேதத்தைவிட, சுத்தஸத்வ குணமுடையதும மோக்ஷமென்னும் ஒரே பலனையறிவிப்பதும், ச்ரமமில்லாமலேயே ச்ரிய: பதியாகிய, பரம்பொருளையறிவிப்பதும், "அத்ர பரத்ர சாபி" [இவ்வுலகிலும் பரமபதத்திலும்] (ஸ்தோத்ரரத்நம்-2) என்றித்யாதியில் சொல்லுகிறபடியே, ஸம்ஸாரதசையிலும் மோக்ஷதசையிலும் நித்யமாய் ஆத்ம ஸ்வரூபத்தோடு சேர்ந்ததாய் பரமப்ராப்யமுமான (அடையத்தக்க பலன்களில் எல்லையானதுமான) ஆசார்ய கைங்கர்யமே ப்ரதானமென்று தெரிவிப்பதுமான திராவிட வேதத்துக்கு எல்லையான மிக்க உயர்த்தியானது. ப்ரமாணங்களைத் தஞ்சமாகக் கொண்டவர்களால் அவசியமாக இசையப்படவேண்டும். இவர்கள் இதை இசையவில்லையாகில் அவ்வளவால் யாருக்கும் எந்த நஷ்டமும் இல்லை. நேர்மாறாகத் தங்களுக்கே அது உள்ளது. திவ்யப்ரபந்தங்களுக்கு ப்ராமாண்யமே பாஹ்யர்கள் (-ஸ்ரீவைஷ்ணவரல்லாதார்) ஒப்புக்கொள்வதில்லை. அதற்காக நாம் என்ன செய்கிறோம். இவர்களும் அவர்களில் சிலரென்று அறுதியிடுகிறோம். வாசகர்களே! இந்தஸமயத்தில் "தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம்தே. கார்யாகார்யவ்யவஸ்திதௌ" [ஆகையால் இது செய்யத்தக்கது, இது செய்யத்தக்கதன்று என்று முடிவு செய்வதில் அர்ஜுநா, உனக்கு சாஸ்த்ரம் ப்ரமாணம்] (கீதை 16-24) என்ற வசனத்தை உங்களுக்கு நினைவூட்டுகிறோம். எல்லாம் ஸ்வரஸமாக முடிவுற்றது.

சிலச்லோகங்களின் கருத்து

ஸகலசாஸ்த்ரஸாரார்த்தங்களையும் கரைகண்ட பூர்வாசார்யர்களாலே நன்றாக அறிவிக்கப்பட்ட அவ்வர்த்தங்களை அறிந்தவர்களாயிருந்த போதிலும், யாவர்சிலர் அவ்வர்த்தங்களை நிந்தித்து தமது அற்ப புத்தியினால் கற்பிக்கப்பட்ட அர்த்தங்களைப்

போதிப்பதொன்றிலேயே ஊற்றமுடையவராக இருக்கிறார்களோ, அவர்களையே (தமக்குஹிதம் சொல்லுமவர்களாக) எதிர்பார்த்து மற்றவர்கள் மூடர்களாக இவ்வுலகில் ஏன் இருக்கிறார்கள். (நல்லாசிரியர்கள் இவ்வுலகில் இல்லையா?)

ஹஸ்திகிரிநாதனென்னும் அண்ணங்கராசார்யன்-கீழே காட்டியபடி, பிரசித்தங்களான பல ப்ரமாணவசனங்களைக் கொண்டு, ப்ராசீநமான திவ்யப்ரபந்தங்களுக்கு உயர்த்தியையும் த்ராவிடவேதத்வத்தையும் பலருமறியக் கூறினான்.

ப்ரதிபக்ஷிகளும் (எதிர்வாதம் செய்பவரும்) புலவர்களுக்கு மிக மகிழ்ச்சியையுண்டாக்குமதான இந்நூலை ஆதரித்துப் படித்து மறைவில் நிச்சயமாகத் துதிசெய்வார்களென்று, ஓ! மனமே உறுதியாக அறுதியிடக்கடவாய்.

மனிதர்களுக்குக் குற்றமாவது-குணங்களை விட்டு தோஷங்களையே சொல்லுதல் என்பதே. ஐயோ! மனிதர்களுக்கு பூஷணம் (= குணமாவது-தோஷங்களை-ஸமாதானம் சொல்லிச் சரிப்படுத்துவதென்பதே ஆகும். ஆச்சரியம்

'இவர்கள் தெய்வங்கொடுத்த கண்களிரண்டையும் திறந்து, தம்மாசார்யச்ரேஷ்டர் அருளிச்செய்த க்ரந்தஸமூஹத்தை ஏன் காண்பதில்லை' என்று சிலரைக் கேட்க, 'வித்யைகளில் ஸாரமான திவ்யப்ரபந்தமென்னும் தமிழ் வேதத்தின்கண் குற்றங்களை ஏறிடுகையாலே அவர்களுக்குக் கண்களிரண்டும் தெரியாமல் போயின' என்று விடையளித்தனர் அவர்கள்.

ஹஸ்த்யத்ரிநாதனென்னும் பெயரையுடைய அண்ணாவினால், வித்வான்களின் மகிழ்ச்சியின் பொருட்டு இயற்றப்பட்ட இந்நூல் ஹஸ்த்யத்ரிநாதனாகிய பேரருளாளனுடையதுயரறு சுடரடியிணையில் ஸமர்ப்பிக்கப்பட்டதாய் சந்திரனும் நக்ஷத்திரங்களும் உள்ளவரையில் மேம்பட்டு விளங்குக

ஸ்ரீவாதிபீகர குருவின் திருவடிகளைப் பற்றியவனாய், ஹஸ்த்யத்ரிநாதனென்னும் மறுபெயர்பூண்டவனான அண்ணங்கராசாரியனால், ப்ரமாணங்களை ஆராய்ச்சிசெய்து இயற்றப்பட்ட கீழ்க்காட்டிய இந்நூல் முடிவடைந்தது.

மணிப்ரவாள ச்லோகங்கள்

எண்ணிறந்த விபுதாவ்ருதே ஸ்பீர
மண்டபே பயமிலாது கேசந!
சண்டை செய்ய அபிலாஷையோடுடன்
மண்டினார்கள் அதிதுச்சபாஷணே!

திவ்யஸூரிகளு அநுக்ரஹிஞ்சிந
த்ராவிடாத்மக மஹாப்ரபந்தமேம்!
சீர்மையில்லையென செப்பினார்களே
கூர்மையின்றி மதிதன்னிலே சிலர்!

வாடீஸ்திஸ் அட்டி நாலாய்ரம்
வேதத்வம் நைவ வர்த்ததே!
நச சீர்மை இதி ப்ராஹு:
க்யோம் ஹைர தேஷாம் ஸதீமதி:

கண்டித்து துர்மதிகளின் மதமுக்ரமத்ய
பண்டாவதாம் அதிகமான முதம் விளைத்தேன்
தண்டாமரைக்குஸமயுக்மஸமாநநேத்ரம்
அண்டாதவர்களுமிதில் ரஸிகா பவேயு:"

என்பயன்வரும் அனந்த சொற்களால்
நற்றமிழ்க்கலைகள் உத்தமா: பரம்!
குற்றமொன்று யதி சாத்ர வர்த்ததே
சற்று கீர்த்தய ஸமாகதோ பஹி:!!

ஸ்ரீகாஞ்சி ப்ரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசார்யன்
(நூலாசிரியன்)

சாற்றுக் கவிகள்

மிக்க பெருஞ்சபைநடுவே அச்சமற வாய்திறந்து,
நக்க வெகு வித்வான்கள் நாலிரண்டு வார்த்தை சொல்லி,
அக்கதையைப் பத்திரிகையில் அச்சிடவே யாவலுடன்,
இக்கரணமாயுரைத்தோம் இங்ஙன மிந்நூல்தனிலே. (1)

(வேதமாமென வாழ்வார்களருளீர நற்றமிழ்கள்
நாதயா முனபாஷ்ய பட்டார்ய மணவாளர்,
ஓதுவேதாந்த குரு முதலானோர் சொல்வண்ணம்,
வேதமாகாதெனுஞ்சொல் வெட்டி விளக்கினனே. (2)

கற்றவர்கள் காமுறுவர் கல்லார் இகழ்ந்தாலென்?
நற்றவர்கள் கலிநீங்கி நற்றமிழின் வேதமெனப்,
பற்றியுடன் பாவித்துப் பரமபதவாயேற,
முற்றிவிழு வேம்புண்டு காக்கை நக என்னாமே. (3)

குருவோது தமிழ்வேதப் பொருள் நீதியொருவாமல்,
பரவாதிபீகரனாமண்ணா ஈதெழுதிவைத்தான்,
அருளாளனடியார்கள் ஆனந்த மலர் பொழிவார்?
மருவார் என்முன் நின்று வாய்காட்ட வல்லாரே? (4)

நீர்மலையிற் கண்ணனுடைய நேரான சொற்களிலே!
சீர்மைதனை யுணராதே தீய கொடுஞ்சொற்களையே,
ஊரறியோம் பேரறியோம் என்றிருக்கும் சிலமனிசர்,
கூறிமிக வபசாரக் குழியதனைப் புக்காரே. (5)

ஒண்டியாயொருவர் மேல் ஒருவர் சொல்லாயினும்,
அண்டினர்க் கரும்பொருள் ஆங்காங்கு விள்ளுமால்,
கண்டதற்குத்தரம் காட்டிடுமிச் சந்தையைப்,
பண்டிதர் பரிவுடன் பார்த்தாங்கு வாழ்த்தவே. (6)

பேய்க்குப் பேய் பேசின போல் பேராமற் சொன்னதல்ல,
வாய்க்கும் வாய்ப் பொருளின்பம் ஆங்காங்களித்தமையால்,
தாய்க்கும் தாய் மந்திரத்தின் சாரமென நன்குணர்ந்து,
நோக்கும் நோக்குடையார்கள் நுட்பமாதாத் தெளிகுவரே. (7)

முன்னோர்கள் வசனத்தை முன்விட்டு யாமிதனில்,
சொன்னோம் நாம் தமிழ்மறையிற் சீர்மைதனைச் சதிராக,
இந்நூலை யாதரியார் ஆழ்வார்களருள் தனக்கு,
எந்நாளுமிலக்காகார் இம்மொழிதான் பொய்யாமோ? (8)

ஆழ்வார்க ளடியிணையில் அன்பாருமடியாரின்
தாளிணையே தஞ்சமெனத் தரணிதனிற் றளராதே.
வாழுமெழிலசுமுடை நற் பாகவதர் முடிசூடும்
நேரிழையாயொளிமல்கும் என்னுடைய விந்நூலே. (9)

கோதில்லா வொண்டமிழிற் காதலுடை நாதமுனி
ஆதி மறைமௌளிகுரு முதலான வாசிரியர்,
பாதமலரிணை போற்றிப் பரிவுடனிவ் விண்ணப்பம்
வாதிபீகரதாஸன் அண்ணா நாம் சொன்னோமே. (10)

கண்டன மெழுதக் கருதும் நற்கவிகள்
பண்டிதரருகிற் பாரதுங் கேட்டும்
பண்டை நூல்களைப் பழுதறப் பார்த்தும்
கண்டிகைக்கும் படிக்கெழுதின் நன்றாமே. (11)

குற்றமற்றதோர்
நற்றமிழ்க்கலையில்
பத்தி பொறாதார்
முக்தி பெறாரே. (12)

பேரருளாளன்
பதமலரிணையில்
சிரொலி நூலைச்
சேர்த்தனனிதே (13)

ஸ்ரீ காஞ்சி ப்ரதிவாதி பயங்கரம்

அண்ணங்காசாரியார்

(க்ரந்த கர்த்தா)